உ
அம்பிகை துணை

காரைநகர் - மணற்காடு

# அருள்மிகு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## 2ம் நாள் உற்சவ விசேடமலர்



19. 03. 2003

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்



திருநாவுக்கரசு நாயனார்

உள்ளே :- "அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வம்"

உ
சிவமயம்
அம்பிகை துணை

# மணற்காடு அம்பிகைக்கு அடியேன் சமர்ப்பணம்

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
தனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

காரைநகர் – மணற்காடு அருள் மிகுதேவி கும்பநாயகி முத்துமாரி அம்பிகைத் தாயின் பால் சந்ததி, சந்ததியாக பக்தி கொண்ட 2ம் நாள் உற்சவகாரர்கள் இத்தெய்வீகம் கமிழும் பக்தி மலரை அம்பிகையின் திருப்பாதங்களில் அற்பணிக்கின்றோம்.


இம்மலரை எங்களை ஆளாக்கிப் பெற்றெடுத்த மறைந்தவர்களான என்தாய்தந்தையரான கணபதிப்பிள்ளை கந்தப்பு, பாரியார் வள்ளியம்மை அவர்களுக்கும், எனது மனைவி சரசுவதி அவர்களின் தாய் தந்தையரான கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் பக்தரான ஓவசியர் கந்தப்பு அம்பலவாணர் அவரின் பாரியார் விசாலாட்சி அவர்களையும் நினைவு கூறும் வகையில் நாம் இத்தெய்வீக மலரை இன்று வெளியிடுகின்றோம்.

வணக்கம்

அறுகம்புலம்
காரைநகர்
19.3.2003

இங்ஙனம்
கே. கே. சுப்பிரமணியம்
பதிப்பாசிரியர்

"நாம் செய்த பிழைகளை எல்லாம்
பொருத்து இருப்பாய் அம்மா"



# பரோபகாரமணி திரு. கே. கே. சுப்பிரமணியம் குடும்பம் காஞ்சி சங்கரமடத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கின்றார்கள்

## ஸ்ரீ ஆதி சங்கரர் பற்றியும் ஸ்ரீ காஞ்சி சங்கரமடத்தில் நிகழும் சமய சமுதாய பற்றியப்பணிகளில் சில துளிகள்

கலியுகம் பிறந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்ரீ ஆதிசங்கரர் அவதரித்தார். ஆதி சங்கரரைத் தொடர்ந்து இன்று வரை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை ஸ்ரீ ஆச்சாரிய சுவாமிகள் இப்பீடத்தை அலங்கரிக்கின்றார்கள். பாரத நாடாம் புண்ணிய பூமியில் எங்கும் பல சமய சமுதாயப் பணிகள் ஆற்றிவருகிறார்கள். 100 வயது தாண்டி 1994 சித்தியுற்ற சந்திரசேகரே சரஸ்வதி சுவாமிகள் 68ஆவது பீடாதிபதியாவர்கள். அவர் ஒரு நடமாடும் தெய்வம். 1976ல் திரு.கே.கே சுப்பிரமணியம் குடும்பம் இவரிடம் பூரண ஆசி பெற்றவர்கள். 69வது ஆசார்ய ஸ்வாமிகள் அகில பாரதம் முழுவதும் யாத்திரிகை செய்துவரும் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஸ்ரீ சங்கர விஜேந்திர ரஸ்வதி சுவாமிகள் 70வது ஆசாரிய ஸ்வாமிகளும் ஆவார். இவர்கள் இருவர்களும் தான் காஞ்சிபுரத்திலுள்ள ஆதி சங்கர மடத்தில் 31.01.1977ஆம் ஆண்டு கே.கே.சுப்பிரமணியம் அவர்களுக்கு சைவத்திற்கும், தமிழுக்கும், கலைக்கும் ஆற்றிவரும் அளப்பரிய தொண்டுக்கு பரோபகாரமணி என்ற விருது வழங்கி கௌரவம் பெற்ற முதல் வெளிநாட்டவர் ஆவார். காஷ்மீர் தொடங்கி கன்னியா குமரிவரை பாரத தேசம் எங்கும் பாரதத்தில் எல்லாப் பகுதிகளிலும் சிறப்பாக அசாம் முதலான வடகிழக்கு மாநிலயங்களில் சமய சமுதாய நற்பணிகள் நடைபெற்று வருகின்றன. சங்கரர் மடம் பல திருப்பணிகள், கும்பாபிஷேகம் நித்தியப்படி பூசைகள், வேத பாடசாலைகள், திருக்கோயில்கள் சிறப்பாக நிர்ணயித்தல், மருத்துவ மனை, சங்கர கண் மருத்துவ மனை, பசுவதை தடுத்தல், பல்கலைக்கழகம் நடாத்துதல் சமய, சமுதாய கலாச்சார பணிகள் பரந்தளவு செய்கிறார்கள்.





ශ්‍රී හින්දු ආගමික කටයුතු පිළිබඳ අමාත්‍ය
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்
MINISTER OF HINDU RELIGIOUS AFFAIRS

## வாழ்த்துரை

காரைநகர் திருமணற்காடு தேவஸ்தானத்திற் பள்ளிகொண்டு அருளும் எங்கள் குல தெய்வமான அருள்மிகு கும்பநாயகி முத்துமாரியம்மனுக்கு ஆண்டுதோறும் உற்சவங்கள் கோலாகலமாக நடைபெறகின்றன. இரண்டாம் திருவிழா வழமையாக 1008 சங்காபிஷேகத்துடன் மிகச் சிறப்பாக நடப்பதுண்டு. இம்முறை அத்திருவிழா தொடர்பாக மலர் ஒன்றை வெளியிடுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

இத் தேவஸ்தானம் சிறப்புக்கள் மிக்கது. பல அற்புதங்கள் நிறைந்த தலமாகும். எங்கள் முன்னோர்கள் இச் சந்நிதானத்தில் ஆகம முறைப்படி வழிபாடு நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். அவர்களின் திருப்பணியைப் இற்றைக்கால தலைமுறையினர் போற்றி வாழ்த்துகின்றனர். இப்போது ஆலயத்தின் திருக்குளம் புதுப்பிக்கப் பெற்றள்ளது. சித்திரத்தேர் அராலியூர் ஸ்தபதி எஸ். அமரசிங்கம் ஆச்சாரியார் அவர்களின் கைவண்ணத்தில் மங்களமான கலைக் கோலத்தில் உருவாகி வருகின்றது. மிகுந்த பணச் செலவில் தேர்முட்டி வேலைகள் பூர்த்தியாகிவிட்டன.

இச் சாதனைகள் எல்லாம் அம்பாளின் கருணையினால் நிறைவேறியுள்ளன. அம்பிகையின் அருளால் நான் அரசியலில் பிரவேசம் செய்தமை எனது வாழ்க்கையில ஓர் திருப்பு முனையாகும். ஆலயத்தின் இரண்டாம் நாள் திருவிழாவை தாய் வழி முன்னோாகள் நெடுங் காலமாக செய்து வருகிறாாகள். நான் சிறுவயதிலே அம்பிகையின் பக்தனாகிவிட்டேன். இப்பொழுது இத் திருக்கோயிலில் தொலைபேசி, பூசைக்கு வேண்டிய பஞ்சாரத்தி, பூஜை உபகரணங்கள் முதலியவற்றை நன்கொடையாக வழங்கும் பேறு பெற்றுள்ளேன்.

அருள் நிறைந்த அம்மாளின் கருணையினால் மேலும் பல திருப்பணிகளை செய்யவுள்ளேன். சித்திரத்தேர் திருப்பணி நிறைவெய்தியதும் கோபுரத் திருப்பணி ஆரம்பமாக வேண்டும். இச்சிறப்பு மலர் கவாச்சியான கோலத்தில் வெளி வருகிறது. அப்பர் பெருமையைப்பற்றி அழகு தமிழில் தமிழ் நாட்டைச் சோந்த பேராசிரியர் டாக்டர் இரா. செல்வக்கணபதி அருமையான நீண்ட "அப்பர் வழங்கிய ஆன்மீகச்செல்வம்" கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்கள்.

இம்மலரை அம்பிகையின் சந்நிதானத்தில் இன்று (19.03.2003) வெளியிடுவதில் பெருமையடைகின்றேன். எல்லோரும் இன்பமாக வாழ அம்பிகையின் திருவருள் பொலிவதாகுக எனப் பிரார்த்திக்கின்றேன்.

தி. மகேஸ்வரன் பா.உ
இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர்

உ

ஓம் சிவசக்தி

யாழ் / காரைநகர் மணற்புரம் (மணற்காடு)

ஸ்ரீ முத்துமாரி அம்பிகை

# திருப்பதிகம்

ஆக்கியோன் கவியோகி - அருட்கவி

சீ. விநாசித்தம்பி M.A.

19. 03. 2003

## யாழ் / காரைநகர் ~ மணற்புரம் (மணற்காடு) ஸ்ரீ முத்துமாரியம்மை திருப்பதிகம்

1. ஐந்து கரத்தனை அணைத்திடும் உமையே
ஆதிம கேசனின் பங்குடை யாளே
சந்தச் சிலம்புடன் தனிநட மாடும்
சங்கரி சாம்பவி சாந்தினி சுந்தரி
சந்ததம் நின்திருத் தாளிணை பாடும்
தவப்பணி யெனக்குத் தந்தரு ளம்மா
செந்தமிழ்க் காரை நகர்மணற் புரமுறை
செல்வியே முத்து மாரியம் பிகையே

நான்பயில் கொடியோன் மாரா சுரனை
நாந்தகம் சூலம் வில்வேல் தாங்கி
ஊன்பயில் மார்பை உதைத்தமிழ்த் தவளே
உயர்நெடுங் கம்பத் துறுதவ மிருந்து
வான்புவி யெங்கும் வளம்பெற வைத்தாய்
மனமணி விளக்காய் எமதிருள் கனைவாய்
தேன்மொழிற் காரை நகர்மணற் புரமுறை
செல்வியே முத்து மாரியம் பிகையே

அருவமும் உருவமும் அருவுரு வங்களும்
ஆகிய அழகியாய் அண்டங்க ளெல்லாம்
மருவிய அன்னையே வானோர் வேண்ட
வன்பகை கொடுநோய் வருந்துயர் நீக்கி
தருநிழல் வேம்பின் தண்ணிழல் அமர்ந்தாய்
சஞ்சல மில்லா வாழ்வெமக் கருளாய்
திருநிறை காரை நகர்மணற் புரமுறை
செல்வியே முத்து மாரியம் பிகையே

ஆரா வமுதே ஆயிரம் கோடி
அருள்விழி யாளே ஆரணம் ஆகமம்
நேரார் யாகம் நின்நேற் றடியார்
நினைத்த வரங்கள் கொடுக்கும் நிமலியே
ஏரார் உடுக்கும் பிரம்பும் தாங்கி
எழிலார் சிங்கத் தினிதுவீற் றிருப்பாய்
தேரூர் காரை நகர்மணற் புரமுறை
செல்வியே முத்து மாரியம் பிகையே

கரகத் தமர்ந்து களிநட மாடிக்
கற்பனைக் கடந்த சிற்பரத் தேனைப்
பருகத் தருவாய் பரவும் தொண்டர்
பாழ்வினை நீக்கிப் பவக்கணக் கழித்துச்
சரணகற் பகத்தின் தனிவாழ் வருளும்
சஞ்சீ வியேநமன் சஞ்சலம் தீர்ப்பாய்
தெருளுயர் காரை நகர்மணற் புரமுறை
செல்வியே முத்து மாரியம் பிகையே
நிரைநிரை யரம்பையர் இன்னிசை பாட
நிமலனும் உமையும் மாலைகள் சூட
அரியயன் இந்திரன் விருதுகள் வழங்க
அறுமுகன் கஜமுகன் அருகினி லிருக்க
கருணை மதிமுகக் கண்ணருள் பொழிவாய்
கருதிய அருளொளிக் காட்சியை அருள்வாய்
திரைகடற் காரை நகர்மணற் புரமுறை
செல்வியே முத்து மாரியம் பிகையே

தவமும் தவத்தின் தத்துவ முடியும்
சத்துசித் தின்பம் தருநாற் கதியும்
பவமும் பவத்தால் பற்றிய வினையும்
பகுத்துணர் யோக பக்குவம் தருவாய்
நவகோள் செலுத்தும் நாகேஸ் வரியே
நதியில் நந்தென வருதட் கூஷயணி
சிவநெறிக் காரை நகர்மணற் புரமுறை
செல்வியே முத்து மாரியம் பிகையே

அத்தன் தந்த மாலையி னாலே
அவம்புரி கயவரை அழித்த மகேஸ்வரி
சித்தங் கலங்கும் சீரடி யவர்முன்
சிரித்த முகத்துடன் தெரிசனம் தருவாய்



பத்திரி வேம்பின் நீழலில் அமர்ந்து
பக்தன் வேண்டிடக் கோயில் கொண்டவளே
சித்திரக் காரை நகர்மணற் புரமுறை
செல்வியே முத்து மாரியம் பிகையே

விழுமிய செல்வமும் வித்தையும் ஒழுக்கமும்
விலகா இலட்சியம் நிலைபெறு வாழ்வும்
அழகிய இல்லமும் மனைவியும் மக்களும்
அன்புசேர் உறவும் சிவப்பணிச் சிந்தையும்
கிழவியே நின்னரு ளின்றிக் கிடைக்குமோ
கிலிபிடித் தலைந்துன் திருவடி பிடித்தேன்
செழுமலர்க் காரை நகர்மணற் புரமுறை
செல்வியே முத்து மாரியம் பிகையே

ஒருவரைச் சென்று கையிரக் காமல்
உன்திரு வடிகளை உளம்மறக் காமல்
கருத்துணர் கல்வி நெறிபிழைக் காமல்
காமியத் தழுந்தி மதியிழக் காமல்
பெருகிய தெய்வம் பெருநிலை பிடிக்கும்
பேறெனக் கருளி ஆறுதல் தருவாய்
திருமுறைக் காரை நகர்மணற் புரமுறை
செல்வியே முத்து மாரியம் பிகையே

நாவிற் சிவமொழி நிலைத்திட வேண்டும்
ஞாலமெ லாமுனைப் பாடிட வேண்டும்
பூவணிந் திணையடி பூசிக்க வேண்டும்
புண்ணிய அடியார் உறவுகள் வேண்டும்
ஆவினம் பேணும் அருட்பணி வேண்டும்
அகத்தி லருளொளி வழங்கிட வேண்டும்
தேவகாக் காரை நகர்மணற் புரமுறை
செல்வியே முத்து மாரியம் பிகையே

19.03.2003

ஆக்கியோன்
கவியோகி
*அருட்கவி - சீ. விநாசித்தம்பி* M.A.
*அளவெட்டி*

### எங்கள் காரைநகர் மணற்காட்டுத் தாயின் அற்புதங்களும் வரலாற்றுச் சிறப்புமிக்க இரண்டாம்நாள் மகோற்சவம்



காரைநகரின் பழம்பெரும் சைவ ஆலயமாக மணற்காடு கும்பநாயகி முத்துமாரியம்மன் ஆலயத்தைப் போர்த்திக்கேயர், ஒல்லாந்தர் சிங்களப்படையினர் கூடத் தீண்ட முடியவில்லை. இது பெரும் அற்புதம். அம்மன் சக்திமிக்க ஆலயம் இப்படியான பெருமைமிக்க சக்திவாய்ந்த ஆலயத்தைச் சிறந்த முறையில் ஆகம முறைப்படி நிர்வகித்து இப்போ இளம் த்லைமுறைக்கு அர்ப்பணித்த பெருமை 2ம் நாட் உற்சவக்காரான கரைநகரின் மூத்த பரம்பரையான காசி அம்பலவி பரம்பரை. இவர்களின் வழித்தோன்றல்தான் மறைந்த கணபதிப்பிள்ளை வைத்திலிங்கம் (மணியக்காரன்) அவரின் மகன் காசிப்பிள்ளை. இன்று இவ்வாலயத்திற்குள் சிறப்புமிக்க 2ம் நாள் உற்சவத்தை இவர்கள் அடிச் சுவட்டைப் பின்பற்றித் தம்பி கந்தப்பா, மறைந்த மகன் இராசநாயகம் பின் கே.கே.சுப்பிரமணியம். அவரின் அன்பு பாரியார் சரசுவதி (புவனம்) அன்புப் பிள்ளைகள் மூதாதையினரைப் பின்பற்றி தொடர்ந்து 1008 சங்கா அபிஷேத்துடன் உற்சவம் சிறப்பாகச் செய்து வருகிறார்கள்.

### அம்பிகையின் கருணை

### காரைநகரில் வைத்து சுங்க அதிகாரி கடத்தப்பட்டார் (ஈழநாடு - 31.03.86)

1986ம் ஆண்டு மகோற்சவத்துக்கு சுங்க இலாகாவில் உயர் பதவி வகித்த உற்சவ உபயகாரான கே.கே.சுப்பிரமணியம் இரண்டாம்நாள் உற்சவத்தைச் சிறப்பாகச் செய்து, மூன்றாம் நாள் உற்சவத்தன்று கொடியேற்றம் புறப்பட முன் இவரைக் கடத்திச் சென்றார்கள். இவரின் பாரியார் தனது மணவாளனை மீட்க தினம் அம்பிகை திருக்குளத்தில் நீராடி ஈரச் சீலையுடன் அபிராமி அந்தாதி பாடி 11 நாட்களும் பட்டினியுடன் இருந்து தனது கணவனை மீட்டுத் தருப்படி அம்பிகையிடம் பழி போட்டார். மேலாகப் பன்னிரண்டாம் நாள் உற்சவகாரர் வேட்டைத் திருவிழா முடிந்து அம்பிகை வீதியுலா வந்தபொழுது இவர் வணங்குவதற்காக இவர்கள்



அறுகம்புலம் இல்லத்தின் நுழைவாயிலில் சுவாமியை வைத்து இருந்தனர். அச்சமயம் பார்த்து கே. கே. சுப்பிரமணியம் அதே இடத்தில் கொண்டுவந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முன்பாக அம்பிகை முன் விடுவிக்கப்பட்டார். இச்சம்பவம் வரலாறு படைத்துள்ளது.

### காரைநகருக்கு முதல் மின்சாரம்

முதல்முதல் காரைநகருக்கு மின்சாரம் வழங்கியபோது இச்சிறப்புமிக்க ஆலயத்தில்தான் கந்தப்பு பெண் வள்ளியம்மை ஞாபகார்த்தமாக கலாநிதி ஆ. தியாகராசா M.P, M.A.M Lit முயற்சியால், மகன் கே.கே. சுப்பிரமணியத்தால் மின்சாரம் வழங்கப்பட்டது.

### விநாயகர் முருகன் ஆலயம்

பிள்ளையார், முருகன், திருவுருவங்கள் மகாவல்லபுரம் சிற்பக்கல்லூரியில் வடிவமைக்கப்பட்டு சுவாமி கரிதாஸ் கிரி (குருஜி) அவாகளால் மணற்காடு திருத்தலம் அனுப்பி பிள்ளையாருக்கும், முருகனுக்கும் மேற்கு வீதியில் ஆலயங்கள் அமைக்கப்பட்டு 1985ல் கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது. கொடிக்கம்ப விநாயகரும் சுவாமி காளிதாஸ்கிரியினால் (குருஜி) வழங்கப்பட்டது.

### சிவாச்சார்யார் பெருமை சாதனை

இச் சிறப்புமிக்க திருக்கோயில் பரம்பரை பரம்பரையாக பூசை செய்யும் சிவாச்சாரியார்களின் பெருமை சிறப்பு வாய்ந்தது. பிரம்மஸ்ரீ நாகமுத்து ஐயா, பின் மகன் பிரம்மஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்கள் ஐம்பது ஆண்டுகளாகப் பூசைசெய்து வருகிறார்கள். இப்போ அவரின் அடிச்சுவட்டில் அவரின் மூன்று புதல்வர்கள். கல்கத்தா இராமகிருஷ்ண மிஷன் சுவாமி , கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஆத்மகனானந்தாஜி அம்பிகை ஆலயம் 2002 ஆண்டு வருகை தந்தபோது சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்களின் ஐம்பது ஆண்டுகள் அம்பிகைக்குச் செய்யும், புனித சேவையைப் பாராட்டியதுடன் இப்படிப் பாரத நாட்டில் பார்த்தது இல்லையென்றும் கூறிவாழ்த்தினார்கள்.

## 1008 சங்காபிஷேகம்

அம்பிகையின் திருவருள் இரண்டாம் நாள் உற்சவம் பல ஆண்டுகளாக 1008 சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. 2ம் நாள் உற்சவமாக தங்கம் வைரம் போன்றவற்றால் கொழும்பு பட்டக்கண்ணு ஆசாரியாரால் செய்யப்பட்ட வலம்புரிச்சங்கு அம்பிகை ஆலயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டது. (1985) இச்சங்கினால் அபிஷேகம் செய்து வருகிறார்கள். மறைந்த நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், நவாலி சாமி விஷ்வநாதக் குருக்கள், சுழிபுரம் சுப்பிரமணியக் குருக்கள, தியாகராஜக் குருக்கள், மாவைஆதினம், மகராஜ் சண்முகநாதக் குருக்கள், நகுலேஸ்வரம் நகுலேஸ்வரக் குருக்கள், மறைந்த அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள், மாவிட்டபுரம் அப்பாக்குருக்கள், இராசாக் குருக்கள், இணுவில் இராமநாதக் குருக்கள், காரைநகர் சோமசுகந்தாக் குருக்கள், ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்த்திரிகள் நா. கணேசசர்மா, சோ. சாம்பசிவம் இன்னும் பலர் கலந்து சிறப்பித்தவர்கள் ஆவர்.

## நாதஸ்வர / தவில்வித்துவான்கள்

அதேமாதிரி நாதஸ்வர தவில் விற்பன்னர்களும் பல நூற்றாண்டு ஆண்டுகளுக்கு மேலாக இரண்டாம் நாள் உற்சவத்தன்று அனைவரும் வருகைதந்து நாத சமர்ப்பணம் செய்வார்கள். இக்காட்சி இலங்கையில் இந்த சைவ ஆலயத்தில் இரண்டாம் நாள் உற்சவத்தில் தான் பார்க்கலாம். இரண்டாம் திருவிழாவில் நாதஸ்வர, தவில் விற்பன்னர்கள் அமரத்துவம் எய்தியவர்களான காமாட்சி சுந்தரம், சின்னத்தம்பி, மூளாய் ஆறுமுகம் வி. தட்சனாமூர்த்தி, என்.ஆர் சின்னராசா, குருசாமி, அளவெட்டி இராஜதுரை, சண்முகசுந்தரம், அப்புலிங்கம், மாவிட்டபுரம் இராசா, கோவிந்தசாமிப்பிள்ளை, இணுவில் விஸ்வலிங்கம், உருத்திராபதி, கோதண்டபாணி, பெரியதம்பி, பெரியபழனி, சின்னப்பழனி, பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை, இராசகோபால், காரைநகர் ஆஸ்தான வித்துவான் கம்பர் மகன் கணேடின், ஆ. பாலகிருஷ்ணன், கலைமாமணி கணேசபிள்ளை, கைதடி பழனி, அளவெட்டி பாலச்சந்திரன், தாவடி இராமு போன்ற பல மகான்கள் நினைவு கூறுவதில் பெருமையடைகின்றோம். 1970இல். விஷேடமலர் யாழ்ப்பாணம் நாதஸ்வர, தவில் விற்பன்னர்கள் பற்றி எழுதியும் வெளியிடப்பட்டது.



## கலைஞர்கள் அரங்கேற்றிய திருத்தலம்

இத் திருத்தலத்தில் இரண்டாம் நாள் உற்சவத்தின்போதுதான் மறைந்த என்.ஆர். சின்னராசா புத்திரர்கள் ரவிந்திரன், சுதா மறைந்த தவில் மேதை தெட்சணாமூர்த்தி மகன் உதயசங்கர், இணுவில் ஆர். சுந்தரமூர்த்தி மகன் ராமதாஸ், கானமூர்த்தி மகன்மார்கள் கண்ணதாசன், கிருஸ்ணதாசன், பஞ்சமூர்த்தி மகன் குமரேசன் அப்படிப்பலர் அரங்கேற்றியது எங்கள் திருக்கோயிலின், இரண்டாம் நாள் உற்சவத்தன்றுதான் என்று கூறுவதில் அம்பிகை அருள் என்றுதான் கூறலாம். கலாசூரி என்.கே. பத்மநாதன், வி.கே. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள் இணுவில் சுந்தரமூர்த்தி மறைந்த என்.ஆர். சின்னராசா போன்றோர்கள் நாட்டில் ஏற்பட்ட சூழலிலும் பல ஆண்டுகளாக தொடர்ந்தும் வாசித்து வருகிறார்கள்.

## அம்பிகைக்கு சித்திரத்தேர்


அம்பிகையின் ஆலயத்தில் சிறந்த முறையில் அன்னதானம் வழங்கப்படுகின்றது. புதிய தேர்முட்டி பல லட்ச ரூபா செலவில் கட்டி முடிந்து இப்போ அராலி ஸ்தபதி அமரசிங்கம் கைவண்ணத்தில் சித்திரத்தேர் வேலை நடைபெறுகிறது. தேர் வேலை முடிய அம்பிகை பக்தர்கள் அள்ளி வழங்குங்கள். ***2004 ஆண்டு வெள்ளோட்டம் நடைபெறும்.***

## திருக்குளம்

பழமைவாய்ந்த எம் தேவியின் திருக்குளம் புதுப்பொலிவுடன் புதுப்பித்து பன்னிரண்டாம் நாள் உபய காரர்களால் சிறப்பாக, கட்டி அம்பிகைக்கு அர்ப்பணித்துள்ளனர். பதினைந்து நாட்கள் உற்சவத்தில் பன்னிரண்டாம் நாள் உற்சவம் வேட்டைத் திருவிழா மிகச் சிறப்பாக நடக்கும். அன்று அம்பிகை மாதாம் கோயில் எழுந்தருளி பவனிவரும் காட்சி வர்ணனைக்கு அப்பாற்பட்டது. அன்று காரைநகர் விழாக்கோலம் பூண்டு இருக்கும்.

## பொது

இந்துசமய அலுவல்கள் அமைச்சர் கௌரவ தி. மகேஸ்வரன். இவர் இத் திருக்கோயிலுக்கு ரெலிபோன், பூசை உபகரணங்கள் இப்படி பல அன்பளிப்புகள் வழங்கி அம்பிகைக்கு தொண்டு செய்வதுடன் மிகவும் பக்தியாக மேலான அன்னதானமும் செய்கிறார்கள்



## காஞ்சிமடப் பிரதிநிதி ஈழத்துச் சிதம்பரம் வருகை

**காஞ்சிமடம், சங்கராச்சாரிய சுவாமிகள் பிரதிநிதியாக ஈழத்துச் சிதம்பரம் காரைநகர், திண்ணபுரம் சிவன்கோவில் திருவாதிரை உற்சவத்திற்கு (19.12.2002 - 20.12.2002) தேர் உற்சவத்தில் சிறப்புப் பிரதிநிதியாக வருகை தந்த திரு.கே. பஞ்சாபகேசன் அவர்கள் காஞ்சி சங்க, மடத்தில் இருந்து திரு.கே.கே. சுப்பிரமணியத்திற்கு எழுதிய அன்புமடல்.**

*It was a pleasure to meet you again. I thank you for kindness and hospitality. It was wonderful trip to Jaffna with you and the Hon. Minister T. Maheswaran being there. Please coney my regards to Hon. Minister and trustee of Elathu Chithambaram, Chief Priest Eswaran Kurukkal and devotees.*

*On my arrival and today (21.12.2002) and shall inform His Holiness in Kanchi on the wonderful Thiruvathurai function at famous Elathu Chithambaram Karainagar and the devotion of all here.*

**தமிழ்நாடு பேராசிரியர் டாக்டர் திருமதி சாரதா நம்பி ஆருரன் எம்.ஏ. அவர்கள் குடும்ப நண்பர் கே. கே சுப்பிரமணியத்திற்கு எழுதிய மடல்.**

**பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உடையீர்,**

**வணக்கங்கள்.**

**தங்கள் மடல்கள் கிடைத்தன. மறுமலை அடிகள்பற்றி எழுதிய என் புத்தக வெளியீட்டு விழாவுக்குத் தாங்கள் தமிழகம் என் அழைப்பை ஏற்று வந்தது மிகவும் பெருமையாக இருந்தது. இலங்கைத் தமிழர் சைவசமயப் பற்றும், மொழிப்பற்றும் உலகமறிந்தது. அவர்கள் அனைவரின் சார்பாக தாங்கள் வந்து மலரை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பெற்றுகொண்டதும் என்னை வாழ்த்தியதாகவே எண்ணுகிறேன்.**



## ரசிககலாமணி விருது 1978

**மகாசமாதி அடைந்த நல்லைக் குருமணி 1978ஆம் ஆண்டு ஆதீன வெளியீடான அருளமுதம் தமிழ் புத்தாண்டு மலரில் இரண்டாவது நாள் உற்சவம்பற்றி நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் எழுதியது.**

**தமிழும் சமயமும் வளரவேண்டும் என்றால் அதற்கெனத் தொண்டு செய்யும் உள்ளம் கொண்டோர் தேவை.**

**நல்லூர் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகள் தமது வாழ்நாளை அருட்பணிக்கென்றே அர்ப்பணித்தவர்கள்.**

**நாளும் நற்றமிழால் நல்லிசையால் எம்பெருமானின் புகழைப் பாடிய திருஞானசம்ந்த சுவாமிகளைப் போன்று அவர் பெயரால் ஆதீனம் அமைத்து ஒவ்வொரு நாளும் ஈசன் புகழ்பாடி அவன் கதைகூறித் தொண்டையால் தொண்டாற்றி வருகிறார்கள் சுவாமிகள். ஆயினும் அருட்பணிகள் குறைவின்றி நிறைவேற அருளாளர்களின் அன்பும் ஆதரவும் மிகுதியாகத் தேவை. சுவாமிகளின் தெய்வீகப் பணிகளுக்கு நல்லாதரவு தரும் சேவையும் பக்தி உள்ளமும் கொண்டவர் திரு.கே.கே. சுப்பிரமணியம் அவர்கள்.**

**ஸ்ரீ லங்கா சுங்க இலாகாவில் சேவையாற்றும் கே.கே.சுப்பிரமணியம் அவர்களின் சிறந்த கடமையின் நிமித்தம் அரசினால் பதவி உயர்வுகள் பல பெற்றவர்.**

**அறிஞர்கள், கலைஞர்கள் ஆகியோருக்கு ஆதரவளிக்கும் உள்ளம்கொண்ட கே.கே. அவர்கள் நல்லைக் குருமணி அவர்களிடம் பேரன்பும் பக்தியும் கொண்டவர்கள். ஆதீன வளர்ச்சிக்கு பல வகையிலும் உதவியிருப்பதுடன் சமயப்பணிகளுக்கும் பயன்கருதாச் சேவையாற்றி வருகிறார்கள்.**

**திரு. கே.கே. அவர்களின் சொந்த ஊர் காரைநகர். மணற்காடு மாரியம்மன்**

கோயில் 2ம் திருவிழாவை ஒரு கலை விழாவாகவே இவர்கள் நடத்தி வருகிறார்கள். ஈழத்து நாதஸ்வர, தவில் வித்துவான்களை அழைத்து பெரிய கச்சேரிகள் நடத்துவார்கள். சுவாமிகளின் விரிவுரை, கலாநிதி சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சொற்பொழிவுகள் ஆகியவற்றையும் நடத்துவார்கள்.

தொண்டுள்ளமும் பக்தி உணர்வும் கலைஞர்களை ஆதரிக்கும் நற்பண்பும் ஒருங்கேகொண்ட கே.கே. சுப்பிரமணியம் அவர்களுக்குத் தமது மணிவிழா நினைவாக ''ரசிக கலாமணி'' என்ற சிறப்பு விருதினை சுவாமிகள் வழங்கினார்கள்.

## அன்பான வேண்டுகோள்

**குறிப்பு :- ஆராலியூர் விஸ்வப் பிரம்மஸ்ரீ சி. அமரசிங்கம் குழுவினரின் கைவண்ணத்தில் வெகு சிறப்பாக நிர்மாணிக்கப்படும் அழகிய சித்திரத்தேரில் அம்பாள் வருகிற ஆண்டு வீதிஉலா பவனிவர இருப்பதால் அடியார்கள் தேர்திருப்பணிக்கு நிதியுதவியை தேர்திருப்பணிச்சபை உறுப்பினர்களிடம் கொடுத்து பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும். இலங்கை வங்கி காரைநகர் நடைமுறை கணக்கு இல: 103லும் தேர்த்திருப்பணிக்கு அடியார்கள் பணம் வைப்பிலிடலாம்.**



*திருச்சிற்றம்பலம்*



### காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில் ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவம் மிகச் சிறப்பாக நடந்தது. 2002 ஓர் கண்ணோட்டம்

உலக நாட்டிலும் ஈழத் திருநாட்டின் நாற் திசையிலும் இருந்து சிவனடியார்கள் லட்சக்கணக்காக வருகைதந்தனர். பஞ்சரத பவனி, கூத்தப்பிரான் நேருக்கு எழுந்து அருளும்போது இலங்கையின் பல பாகத்திலும் இருந்து பல சிவாச்சாரியார்கள் யாழ் நயினை பரமசாமிக் குருக்கள் தலைமையில் வருகைதந்து வேதம் ஓதினார்கள். மேலாகக் காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள் தன் பிரதிநிதியாக சைவப்பெருமகன் கே. பஞ்சாபகேசன் வருகை தந்து இருந்தார். 19.12.2000 அன்று ஆலய வசந்த மண்டபத்தில் மாலை 7.00 மணிக்கு பரோபகாரமணி கே.கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற 48 ஆவது ஆண்டு காரைநகர் மணிவாசகர் விழாவிலும் கலந்து ஆசியுரையும் அவர் வழங்கினார்கள். அத்துடன் சபையினர் நடத்திய சமயபாடப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவ மாணவிகளுக்குத் தங்கப் பதக்கங்களும் பரிசில்களும் காஞ்சிப் பிரதிநிதி அருள்மொழி அரசு வசந்தா வைத்தியநாதன், திரு.கே.கே. சுப்பிரமணியம் ஆகியோர் வழங்கினார்கள். திரு.கே.கே சுப்பிரமணியத்தின் அரிய முயற்சியினால் இம்முறை சமாதான உடன்படிக்கையையிட்டு பத்து நாட்களும் முதல்முதல் இலங்கை வானொலி நேரடி அஞ்சல் யாழ் மண்ணில் எம் பிரசித்தி பெற்ற ஈழத்துச் சிதம்பர ஆலயத்தில் நடைபெற்றது கூத்தப்பெருமான் திருவருள்.

சுவிஸ், ஐ.பி.சி, (I.B.C) வானொலியும், உலகம் எங்கும் நேரடி அஞ்சல் செய்தார்கள். இதற்கான ஒழுங்குகளை தமிழ் பிரிவு தலைவர் உயர்திரு செ. சிவராசாவும், உருத்திராபதியும் திறம்படச் செய்தார்கள். ஸ்ரீ நடராசா சிவம் மூன்று நாட்களும் எம் திண்ணைபுர திருத்தலத்தில் தங்கிச் சிறப்பாகச் செய்தது பாராட்டுக்குரியது.

மேலும் ஆதீன கர்த்தாக்களும் ஆலயத்திற்கும் பாவிக்க அமைச்சர் ஒட்டோ, ரெலிபோன் இல.021-2225037 வசதிசெய்து வழங்கியுள்ளார். மின்னல்பட்டு சிவன்கோவில் இராஜகோபுரம் பொம்மைகள் சில சேதம் அடைந்ததால் தமிழகத்தில் இருந்து சிற்பிகளை அழைத்துவந்து பொம்மைகள் போடச் செய்தார்கள். ஆலயத்திற்கு பணமாக ஒரு லட்சம் ரூபாயும், ஒரு இரும்பு (Safe) உம் வழங்கி உள்ளது. பாராட்டுக்குரியது. இப்போ ஆதீன கர்த்தாக்கள், குருக்கள் தவில் வித்துவான் வீரச்சாமி அவர்கட்கு இல்லம் கட்டிக்கொடுக்க அமைச்சர், திரு.கே.லோகநாதன் (உலக வங்கி U.S.A) திரு. செந்தில்நாதன் (சுவிஸ்) போன்றோர் முன் வந்துள்ளனர். கனடா கனகசபாபதி யாத்திரிகர் தங்க புதுசாக ஓர் மடம் கட்ட திட்டம் போட்டுள்ளார்கள். உங்கள் ஆதரவும் வேண்டும். 365 நாட்களும் எம் ஈழத்துச் சிதம்பரத்தில் அன்னதானம் வழங்கவும் அன்னதான சபையினர் ஏற்பாடு செய்கிறார்கள்.

இம்முறை கலாசூரி அளவெட்டி என்.கே. பத்மநாதன் உட்பட அனைத்து நாதஸ்வர தவில் வித்துவான்களும் தமிழ்நாடு கலைமாமணி திருப்புங்கூர் முத்துக்குமார சுவாமியும் வருகை தந்து உற்சவத்தைச் சிறப்பித்தார்கள்.

எங்கள் ஆனந்த நடராஜப் பெருமானும் அம்பிகையும், மற்றும் பரிவார மூர்த்திகளும் தமிழகத்தில் இருந்து கே.கே. சுப்பிரமணியம் அவர்களால் செவ்வந்தி, சம்பங்கி, மருக்கொழுந்து முதலிய புஸ்பங்கள் தேரும், தீர்த்த உற்சவத்துக்கு வரவளைக்கப்பட்டு சௌந்தராம்பிகை, நடராஜப்பெருமானை, ஐயனார் மற்றும் பரிவர மூர்த்திகள் சிறப்பாக அலங்கரித்து எழுந்தருளிய காட்சி வர்ணனைக்கு அப்பாட்பட்டது. பலர் பார்த்து ஆனந்தக் கண்ணீர்விட்டனர்.

இச் சிறப்புமிக்க ஈழத்துச் சிதம்பரத்தில் ஆலய ஆதீன கர்த்தாக்கள் பரம்பரை பரம்பரையாக நிர்வாகம், 1505 A.D. உத்திரகோசமங்கை இல் இருந்து வருகைதந்து பரம்பரை பரம்பரையாகச் சிவாச்சாரியார்கள், நாதஸ்வர, தவில் வித்துவான்கள் வாழையடி வாழையாக வந்த கம்பர் பரம்பரை சேவை செய்கிறார்கள். இப்படிப் பல சிறப்புக்கள் இவ்வாலயத்தில் உள்ளன. மேலாக அற்புதங்களும் பல. படையினரின் செல் அடியால் ஐந்து தேர்கள், சப்புறமும் பழுதடைந்தபோது, அரசுடன் முறையிட்டு திரு. கே.கே. சுப்பிரமணியத்தின் அரிய முயற்சியால் ஐம்பது லட்சம் ரூபா பெற்று, அத்துடன் இன்று ஆலயத்தில் புதுதேர்கள், சப்பறம் கட்டியுள்ளார்கள், மேலாக ஆலய மடத்தில் குடிகொண்ட படையினரை வெளியேற்ற கே.கே. சுப்பிரமணியம் அரும்பாடுபட்டார்கள், 07.06.1998 அன்று நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தில் தலைமை தாங்கிய நவாலி சாமி விசுவநாதக் குருக்களுக்கும் மற்றவர்களுக்கும் சுப்பிரமணியம் அவர்கள் கொழும்பில் இருந்துவர (M.O.D Clearance) எடுத்துக் கொடுத்து விமானமூலம் இவர்களை யாழ்ப்பாணம் அனுப்பிவைத்தார்கள். 07.06.1998 மகா கும்பாபிஷேகம்



சிறப்பாக நடந்ததை சைவ உலகம் இன்றும் பாராட்டுகிறது வாழ்த்துகிறது.

இம்முறை திருவாதிரை உற்சவத்தில் எம் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் சிவகாமசுந்தரி சமேத கூத்தப்பெருமானை வழிபடப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ லக்ஷ்மன் கிரியல்ல அவர்கள், அவரின் குடும்பம், அமைச்சு அதிகாரிகள் வருகை தந்து வழிபட்டுக் காளாஞ்சி பெற்று அத்துடன் தென்னங்கன்றுகளும் ஆலய பூந்தோட்டத்தில் நட்டு, மேலும் 500 தென்னம்பிள்ளைகள் அன்பளிப்புச் செய்தார்கள். ஆலயத்திற்கான வட பிராந்திய போக்குவரத்துச் சேவை சிறப்பாக நடைபெற்றது. பாராட்டுக்கு உரியது. தீர்த்தத்தில் அன்று காவடிகளும் எல்லா ஆலயங்களிலிருந்தும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தது.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு.க. பரமேஸ்வரன், மேலதிகச் செயலாளர் திரு.க. பரமலிங்கம், பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சிவபாதம் குடும்பத்துடன் இன்னும் பலர் பலபாகங்களில் இருந்து வருகை தந்திருந்தார்கள். ஒன்றரை இலட்சம் மக்கள் வருகைதந்ததாகப் பலர் கூறினார்கள். கடற்படையினர் பவுசர் மூலம் குடிநீர் தொடர்ந்து வழங்கினார்கள். எல்லாம் தில்லைபுர திருக்கூத்தன் திருவருள்தான் என்று நாம் கூறுவோமாக.

*திருச்சிற்றம்பலம்*
*மேன்மை கொள் சைவநீதி விளங்குக*
*உலகம் எல்லாம்.*

**சிவதொண்டன்**
*ஈழத்துச் சிதம்பரம்.*

உ

அராலிதெற்கு, வட்டுக்கோட்டை.

03-02-2003

# அம்பிகையின் திருத்தேர் திருப்பணிப்பற்றி ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ *சி. அமரசிங்கம் ஆச்சாரியார் அவர்கள் அன்புக்கடிதம்*

அன்புடன் கே.கே. ஐயா அவர்கட்கு,

தங்களின் கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். அம்பிகையின் தேர்த் திருப்பணி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வருட மகோற்சவத்திற்கு முன்பு ஒருபகுதி வேலையை முடிப்பதாக எண்ணியுள்ளேன். மேலும் நூல் வெளியிடுவதாக எழுதியுள்ளீர்கள். கட்டுரையும் எழுதி அனுப்பும்படி கேட்டுள்ளீர்கள். ஆகையால் கீழே ஒரு குறிப்புரை வழங்குகின்றேன்.

நிற்க இவ்விடம் வேலையாட்கள் குறைவாக உள்ள படியால் வேலை செய்வதற்கு இந்தியாவில் இருந்து இரண்டு சிற்பிகளை வரவழைக்க வேண்டிவரின் நான் இந்தியா செல்ல வேண்டி வரும். 02 அங்கிருந்துவரும் சிற்பாச்சாரியார்களுக்கரிய ஏளைய பெறவேண்டி வரும். ஆகையால் இவற்றுக்குரிய ஏளையகி "யளளிழசவ (எனக்குரியது) எடுக்க வேண்டி வரும். இவ்வுதவிகளை அத்தருணத்தில் தாங்கள் செய்து கொடுப்பீர்கள் என்றும் நம்பிக்கை உண்டு.

மேலும் சைவம் சிறந்துவிளங்கும் காரைநகர் மணற்காடு என்னுமிடத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் சித்திரத் தேரைச் செய்யும் பணியைப் பேறாகப் பெற்று அப்பணியை ஆற்றிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மேற்படி தேர்பற்றிய சில குறிப்புகளை இங்கு தருகின்றேன். இத்தேரானது 36அடி உயரமும், பூதப்பார்ச் சிற்பங்கள், நட்டுக்கண் சிற்பங்கள், இரண்டடுக்கு பெரிய சிற்பங்கள், சிம்மப்படை, குதிரைப்படை, யாளிப்படை போன்ற பல சிற்பங்களுடன் 4 பெரிய குதிரைகள் பிராமி ஆகிய வர்ணமூட்டும் சிற்பங்களுடனும் அமைக்கப்படும் ஓர் சிறந்த சிற்பங்கள் நிறைந்த அடித்தள அமைப்பைக் கொண்டதாகவும் மேற்பகுதி புராதன வழமை உடைய புடவை கட்டி அலங்கரிக்கப்படும் தேராக அமைக்கப்படும். இச்சித்திர தேருக்குரிய தேவைகளை இவ்வாலய நிர்வாகிகள் மிகவும் சிறப்பாக பூர்த்தி செய்து வருகின்றனர்.

*சுபம்*

இங்ஙனம்.

*ஸ்தபதி* விஸ்வப்பிரம்ம ஸ்ரீ.சி.அமரசிங்கம் ஆச்சாரியார்

*அராலி.*

*குறிப்பு :- எங்கள் இல்லத்தில் உள்ள மிகப்பழைய இலுப்பைமரம் தேர்வேலைக்கு அர்ப்பணித்துள்ளோம்.*





உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வம்

செந்தமிழ் வாரிதி

முனைவர் இரா. செல்வக் கணபதி எம்.ஏ.பி.எச்.டி.

*தமிழ்நாடு*

இந்தியத் தத்துவச் சிந்தனையார்களுள் அப்பரடிகளுக்குத் தனித்த ஒரு பேரிடமுண்டு. சாலப்பெருமையும். காலப்பழமையும் கொண்ட, சைவ சமயத்தின் தூண்களுள் ஒருவராக எண்ணத்தக்க பெருமைபடைத்தவர் அவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அப்பரடிகள். சமயவாழ்வு என்பது, சமூகநலம் பேணுவதற்கு ஓர் அடித்தளம் என்று வாழ்ந்து காட்டியவர். அவரது அழகிய தேவாரப்பனுவல்களும். அதில் காணக்கிடைக்கும் ஆன்மீகச் சிந்தனைகளும் முற்றிலும் புரட்சிகரமாக அமைந்தன. அப்பரடிகளின் நீண்ட பெருமிதவாழ்க்கை, தமது ஆன்மீகச் சிந்தனைகளைத் தன்மேல் வைத்தே வாழந்து காட்டிய, ஒருசத்திய சோதனையாகவே அமைகின்றது. அவரது வாழ்வாலும், வாக்காலும் இந்தியத் திருநாடுபெற்ற ஆன்மீகச் செல்வத்தைப் புதிய கண்ணோட்டத்தில் ஆராயும் முயற்சி மகிழ்ச்சியைத் தருகிறது.

"ஆன்மீகம்" என்ற சொல், தத்துவ நூலாசிரியர்களிடையே ஆன்மாவின் - உயிரின் ஈடேற்றம் குறித்த ஒரு கோட்பாடு என்ற பொருளிலேயே பெரும்பாலும் வழங்கப்பெற்று வருகிறது. இறைவழிப்பட்ட, சமயநெறிநின்று, உயிரின் ஈடேற்றம் குறித்து ஆராயும் "தத்துவ ஆய்வு" என்ற பொருளில், ஆன்மீகம் என்ற சொல்லை இங்கே நாம்ஆள இயலாது. அத்தகு நுட்பமான ஆய்வு, சைவத்துறையில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் உருப்பெற்றிருக்கவில்லை. எனவே, அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வமென்பது, ஒரு சமயச் சான்றோர் - இறைநெறி நின்று, உலகவர்க்கு விடுத்த ஓர் அருட்செய்தி என்ற பொருளிலேயே ஆராயப்படுகின்றது. அப்பரடிகள். சைவசமய நெறி நின்று, மக்களின் ஈடேற்றம் குறித்து வழங்கிய நற்செய்திகளே, அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வமாக விரிகின்றது.

காந்தியடிகள் இந்தியச் சுதந்திரப் போராட்டத்திற்குத் தலைமையேற்க

வந்தகாலை, அவரது வருகைக்கு நல்வரவு கூறுகின்றார் மகாகவி பாரதியார். ஆங்கிலேயர் ஆட்சியில், இந்தியத் திருநாடு தாழ்ந்துகிடந்த நிலை எத்தகையது என்பதை அவர் கவிதை ஒன்று வேதனையோடு விரிக்கின்றது. "இந்த வையத்து நாட்டில் எல்லாம், தாழ்வுற்று வறுமைமிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்றதாம் ஓர் பாரததேசம்" என்று காந்தியடிகளின் தொண்டுக்குக் களமாய் அமைந்த, பாரதத்தின் நிலை பாரதியரால் படம் பிடிக்கப்படுகிறது. ஏறத்தாழ 20ஆம் நூற்றாண்டில் நிலவிய அதேநிலை, அப்பரடிகள் அவதரித்த கி.பி. 7ஆம் நூற்றாண்டிலும் நிலவியமையை வரலாற்றாய்வுகள் தெளிவுபட விரித்துரைக்கின்றன.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் வடக்கிலும், தெற்கிலும் நாட்டை மன்னர்கள் ஆண்டார்கள், என்றாலும், மன்னர்களைச் சமயவாதிகள் ஆட்டிப் படைத்திருந்தனர். மக்கள். வழிபாட்டு உரிமையையும் கூட இழந்திருந்தனர். தமிழ் வழக்கு ஒழிந்து, அயல் வழக்குகள் தலைநிமிர்ந்தன. காலகாலமாகப் பேணிக்காத்த தமிழ்நாட்டுக் கலைகள், காமத்தைத் தூண்டுவன எனக் காரணம் காட்டப்பெற்று ஒடுக்கப்பெற்றன. பெண்மை, பெரிதும் இகழப்பட்டது. "எல்லாம் தாழ்வுற்று" - என்ற பாரதியாரின் தொடரிலே காணப்படும் நிலை, அன்றே தமிழகத்தில் நிலவியிருந்தது. அரசியல் வாழ்விலும், சமய வாழ்விலும் தனிமனித உரிமை என்பது முற்றாகப் புறக்கணிக்கப் பெற்றிருந்தது. ஓர் அருளாளரின் தொண்டுகளை, அவர் வாழ்ந்திருந்த காலப் பின்னணியோடு ஆராயந்தால்தான், அதன் சீர்மை நன்கு விளங்கும். அப்பரடிகளின் வாழ்வியலை உற்று நோக்கி ஆராய்ந்தால். சமயம் சார்ந்த. ஒரு சமூகப்புரட்சிக்கு வித்திட்டவர் அவர் என்பது பட்டாங்குவிளங்கும். அவர் நிகழ்த்திய உன்னதமான போராட்டக் கூறுகளில், காந்தியடிகள் நிழலாடுவது தெரிகின்றது.

அரசின் தலைவன் மன்னன். அவன் அமைச்சர்களின் துணைக் கொண்டு சமூகச் சட்டங்களின் வழி நாட்டை நடத்திச் செல்லும் கடமையுடையவன். அதேபோல். இறை நெறிப்பட்ட அறங்களை வற்புறுத்தி, ஆன்மீக நெறியில் மக்களை நடத்திசெல்லும் கடமை ஆன்மீக வாதிகளுக்கு உரியது. அரசு சட்டத்தின் துணைக்கொண்டு மக்களின் புறவாழ்வை நெறிப்படுத்தும் கடமையுடையது. சமயம், அறத்தின் முணைக்கொண்டு மக்களின் அகவாழ்வை நெறிப்படுத்தும் கடமையுடையது. இவை இரண்டுமே மக்களை நெறிப்பட வாழவைக்க இன்றியமையாதன.

தன்னுரிமை உடைய அரசும், சமயமும் ஒன்றிலொன்று குறுக்கிடாது, தத்தம் கடமைகளை இயற்றும் வரையில் பிரச்சனைகள் எழுதல் இல்லை. மாறாக, அரசு சமயத்தை நசுக்கித் தன்வயப்படுத்த முயன்றாலோ, அல்லது சமயம் அரசை மயக்கி ஆட்சி கொள்ளத் தலைப்பட்டலோ நிலைமை சீர்குலைகிறது.

அப்பரடிகள் அவதரித்த காலத்தில், வடக்கே பல்லவ நாடும், தெற்கே பாண்டியநாடும் முற்றாகச் சமணப்பிடியில் சிக்குண்டு கிடந்தமையைச் சேக்கிழாரின் பெரிய புராணம், தெளிவுபட, அகச்சான்றுகளுடன் எடுத்துரைக்கின்றது. சமயம்,



அரசைத் தன் வயப்படுத்திக் கொண்ட பிறகு, சிறுபான்மை மக்களின் வழிபாட்டு உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அப்பரடிகள், சைவ சமயத்தை விட்டுச் சமண சமயத்தில் சேர்ந்தபோது எவ்வித எதிர்ப்பும் சிவ நெறியாளர்களால் எழுப்பப் பெறவில்லை. பல ஆண்டுகளுக்குப்பிறகு, அவரே சைவம் திரும்பியகாலை, சார்ந்திருந்த சமணசமயக் குருமார்களின் தூண்டுதல்களால், மன்னன் அவருக்குக் கொடிய தண்டனைகளை வழங்குகிறான். எனவே ஒருசமயம் அரச செல்வாக்கைப் பெற்றால், ஏனைய சமயங்களின் உரிமைகள் பறிக்கப்படும் என்பதும், தாம் விரும்பிய சமய வாழ்வை மேற்கொள்ள உரிமை மறுக்கப்படும் என்பதும் நன்கு புலனாகின்றன.

நனிநாகரிகக் குடியாட்சி நாடுகள், மதச்சார்பற்ற அரசாகச் செயல்படுவதன் நோக்கம் எவ்வளவு உன்னதமானது, உரிமை சார்ந்தது என்பது, இவற்றின் வாயிலாக உணரப்படுகின்றன.

அப்பரடிகள் பிறந்தகாலை மருள் நீக்கியார் எனப்பெயர் சூட்டப்பெற்றவர். சமணம் சார்ந்து, கற்பன கற்று, வாதங்களில் வென்று தலைமைபெற்ற காலை வழங்கப்பெற்ற பெயர் தருமசேனர் என்பது. பல்லாண்டுகள், சமணசமயத் தலைமை பூண்டிருந்த அப்பரடிகள், தாய்ச்சமயமாகிய சைவசமயத்திற்கு மீள்கின்றார். இறைவன், அசரீரியாக "நாவுக்கரசரர்" என்ற நாமத்தைச் சூட்டியருள்கின்றார். ஏனைய சமணக் குருமார்களின் தூண்டுதல்களால், சினம் கொண்ட பல்லவ மன்னன், மதம்மாறியதற்காக அப்பரடிகளைத் தண்டிக்க அழைத்து வருமாறு அரசியல் சுற்றத்தார்க்குக் கட்டளை இடுகிறான். கட்டளை இட்டவன் அரசியல் சுற்றத்தாரை நோக்கி, "அழைத்து வரச்செல்லும் நீங்கள், சென்ற இடத்தில் ஏதேனும் பொருளைக் கையூட்டாகப் பெற்றுக்கொண்டு, விட்டுவிடாது கட்டாயமாகப் பற்றி வாருங்கள்" என எச்சரிக்கிறான்.

*" தெருள் கொண்டோர் இவர் சொன்ன*
*தீயோனைச் செறுவதற்குப்*
*பொருள் கொண்டு விடாது என்பால்*
*கொடுவாரும் எனப்புகன்றான்."*

சேக்கிழார் பதிவு செய்யும் இத்தொடர் அக்காலத்தில் நிலவிய சமூகச் சீரழிவை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இத்தகு சூழ்நிலையில், அரசனையோ சமயவாதிகளையோ, அரசியல் சுற்றத்தார்களையோ எதிர்த்துக் கேட்கும் துணிவைச் சமூகம் பெற்றிக்கவில்லை. சீர்கேடுகளை எதிர்த்துப் போராடும் துணிவைச் சமூக மக்கள் இழந்து விட்ட நேரத்தில், ஒரு சமயவாதியாகிய அப்பர்பெருமான், சமூகக் கொடுமைகளுக்கெதிராகப் போர்க் கொடி உயர்த்திய புரட்சிகரமான வீர வரலாறு, கி.பி. 7ஆம் நூற்றாண்டில் அமைகின்றது.

இப்போராட்டம் கூட, ஒரு வன்முறைப் போராட்டமாக அமையாது, இறைவன் பெயரால், ஒரு சாத்வீகப் போராட்டமாகவே உருவெடுக்கின்றது. திருவதிகை வந்தடைந்த அரசச் சுந்தத்தார் அப்பரடிகளை நோக்கி,

*"இன்று நுமை அரசன் அழைத்தது*
*எமை விடுத்தான், போதும்"*

எனக் கூறுகின்றனர்.

மன்னவன் அழைப்பினை ஏற்க வேண்டிய கடமை, ஒரு குடிமகன் என்ற முறையில் தமக்கு உண்டு என்பதை உணராதவரல்லர் அப்பரடிகள். ஆனால், மன்னன் நடுவு நிலைமை தவறிவிட்ட நேரத்தில், அவனுக்கு மக்கள் மீது அதிகாரம் செலுத்தும் உரிமை இல்லை என்று அவர் கருதுகின்றார்.

*"நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்"*

என்ற திருத்தாண்டகத்தால், மன்னன் கட்டளைக்கு அடி பணிய மறுக்கின்றார் அப்பரடிகள்.

தமிழக வரலாற்றில் முடியாட்சிக்கெதிராக ஒரு குடி மகன் எழுப்பிய - அதிலும் ஒரு சமயத் தலைவர் எழுப்பிய வீரமிக்க உரிமைக் குரலாக, முதல் முழக்கமாக இது அமைகின்றது. சமயவாதிகள் கோழைகளல்லர்: அநீதி இழைக்கப்படுமானால், அரசனையும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு, மரணம். அதற்கான பரிசாக அவர்களுக்கு ஏற்படுமானாலும், அதனை ஏற்க, அவர்கள் தயங்க மாட்டார்கள்: அரசன் வெறும் ஆட்சித் தலைவன் மட்டுமே: குடிமக்கள், ஒருகாலும் மன்னனுக்கு அடிமைகளல்லர்: சங்கரனாகிய கோமானுக்கு மட்டுமே என்றென்றும் அடிமைகள், என்ற பொருள் தரும் திருத்தாண்டகம், அப்பரடிகளின் சமய நெறிப்பட்ட சமூகச் சிந்தனைகளுள், முதலாவதாக எண்ணத்தக்கது. *"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே"* என்று தொடங்கும் அமரகவி பாரதி,

*"பூமியில் எவர்க்கும் இனி அடிமைசெய்யோம்*
*பரிபூரணனுக்கே அடிமைசெய்து வாழ்வோம்"*

என்று நிறைவித்த அருமைப்பாட்டில், அப்பரடிகளின் உரிமை முழக்கம் புதுவடிவம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது.

சைவம் சிவபெருமானைத் தலைவனாக ஏற்றுப் போற்றும் பெருநெறி. ஆனாலும், சைவம் கோயிலுக்குள்ளேயே ஒடுங்கிக்கிடக்கும்படி மக்களை ஒருகாலும்



வற்புறுத்தியதே இல்லை. இறைவன் பெயரால் சிற்றுயிர்களிடம் அன்பும், மக்களிடம் நேயமும் கொண்டு வாழ வேண்டும் என்று வற்புறுத்திய பெருமை அதற்குண்டு. மனித நேயமே சைவத்தின் தலையாய கொள்கை. மக்களை விட்டு விட்டு ஆராய, சைவத்தில் என்ன இருக்கின்றது என்று வினாத் தொடுத்தவர்கள் சைவ சமயக் குரவர்கள்.

திருமூலரின் திருமந்திரம் சைவ சமயக் கோட்பாட்டுக்கு ஒரு பாடலில் அழகாக விளக்கம் தருகின்றது.

*"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை"*

என்ற தொடரால், சைவத்தில், வழிபாடுகள், மற்றும் சடங்குகள் என்பன, ஒரு சிறுகூறு என்று விளக்கம் தருகிறார் அவர். ஒரு பச்சிலையைப் பறித்து, சிவலிங்கத்தின் திருமேனியின் மீது அன்போடு இடுவதோடு சமயம் சார்ந்த வழிபாடு நிறைவு பெறுகிறது.

திருமந்திரத்தின் இரண்டாவது வரி. சைவம் சார்ந்த மக்களின் சமூகக் கடமை இன்னது என்பதை வற்புறுத்துகிறது.

*"யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை"*

சிற்றுயிர்கள் பசியால் வாடிக்கிடக்கையில், அவற்றின் துயர்நீக்கும் உயிரிரக்கம் என்பது, சைவசமயம் காட்டும் உன்னதக் கோட்பாடுகளுள் ஒன்று. இவ் உயிரிரக்கமே பின்னர், ஜீவகாருண்யம் எனப் பேசப்பெற்றது. இத்தோடு, சமய வாழ்வு முடிந்து விடவில்லை. மேலும் திருமூலர் தொடர்கிறார்.

*"யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி"*

தன்னொத்த மனிதன் பசித்துக்கிடக்கையில், அவன் காண உண்பான், சைவனாதல் ஒருகாலும் இல்லை, உனக்கு உணவு கிடைத்து உண்ணும் போது, பசித்திருப்பான் ஒருவனுக்கு "ஒரு பிடி அன்னம் இட்டு உண்டு" என்று, மனித நேயத்தை, மகத்தான கொள்கையாக வற்புறுத்துகிறது. யாருக்கு இடுவது? திருநீறு பூசிய சைவனுக்கு மட்டும்தானா? இல்லை, யாராக இருந்தாலும் பசித்தவனுக்கு ஒரு பிடி அன்னம் இடு என்று மன விரிவோடு சைவம் எல்லையிட்டுக் காட்டுகின்றது.

*"நேரவந்தவர் யாவராயினும்"*
என்றும்.
*"அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் "*

என்றும் வரும் தருமுறைத் தொடர்கள், சைவம் விரித்த மனித நேயம், இன்னார் இனியார் என்று பாராது அமைந்திருந்த பெருமிதத்தைப் பேசிக் காட்டுகின்றன. நிறைவாகத் திருமந்திரம்,

*"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"*

என்று தனி மனிதப் பண்பாட்டை வற்புறுத்துகின்றது.

சைவம், மனிதன் மனிதனிடம் காட்ட வேண்டிய அன்பு கலந்த பண்பாட்டையும் வற்புறுத்துகின்றது. *"இனிய உளவாக இன்னாத கூறும் இயல்புடையார்"* சமயவாதிகள் என உரிமை கொண்டாடுவதைச் சைவம் ஏற்க மறுக்கின்றது. ஒன்று சேர்த்துப் பார்க்கும்போதில் சைவம் சார்ந்த சமய வாழ்வில் சடங்குகளுக்கு உரிய பங்கு நான்கில் ஒன்றாகவே அமைகின்றது.

சிற்றுயிர்கள்பால் காட்டும் உயிரிரக்கம் ஒரு கூறாக, மனித நேயம் ஒரு கூறாக, மனிதப் பண்பாடு ஒரு கூறாகச் சைவம் என்ற உன்னத நெறி உருப்பெற்று உயர்கின்றது.

திருமூலர் காலம், அப்பரடிகளுக்குப் பிற்பட்டது என்பது அறிஞர் பலர் கண்ட முடிபு என்றால், சைவம் பற்றிய இவ் உயரியக் கோட்பாடு உருப்பெறுவதற்கே அப்பரடிகளின் வாழ்வும் வாக்குமே அடித்தளம் என்பது உறுதியாகின்றது.

நால்வகை நெறிகளுள் ஒன்று சரியை என்பது, திருக்கோயில்களுள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கத் திருமேனிகளுக்குச் செய்யப் பெறும் புறப்பூசை முறைகளைச் சரியை என்பர். இந்நெறி நின்றவர் அப்பரடிகள் என்பது ஒரு பொதுவான மதிப்பீடு. திருவாரூர்த் திருத்தாண்டகத்துள்,

*"நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா"*

என அழைத்து அலகிடல், மெழுக்கிடல், பூமாலை புனைந்தியற்றல், புகழ்ந்துபாடல், தலையால் கும்பிடல். கூத்தாடல் என முதற்படியான சமயச் சடங்குகளை விரித்துரைப்பர் அப்பரடிகள்.

இரண்டாவதாகிய உயிரிரக்கம், அப்பரடிகள், சைவத்திற்கு வற்புறுத்தி வழங்கிய அருட்கொடைகளுள் ஒன்று. சங்க இலக்கியங்கள், தமிழர் வழிபாட்டு மரபுகளை ஆங்காங்குச் சுட்டிச் செல்லுகின்றன. வழிபாடுகளில், உயிர்ப்பலி பற்றிய சில குறிப்புக்களை ஆங்காங்கே காண முடிகின்றது.



உயிரிரக்கம் என்ற உன்னதமான கோட்பாட்டைத் தமிழக மக்களுக்கு வற்புறுத்தி வழங்கிய தங்கள், சமணமும், பௌத்தமும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் உயிர்ப்பலிக்கு எதிராக முழக்கங்கள் இடுவதை, அவற்றுள் காணலாம். வேள்விகளை உடன்பட்டு, உயிர்ப்பலியை ஏற்ற வேத வழிப்பட்ட, வைதீகச் சமயங்களுள் ஒன்றாகிய சைவம், அப்பரடிகள் காலத்தில் மீண்டும் புத்துயிர் பெற்றது. அக்காலை, உயிர்ப்பலியை முற்றாக வெறுத்து எல்லா உயிர்களிடத்தும் அன்புசெலுத்தும் கருணையே சைவத்தின் மூலமான தருமநெறி என்று அப்பரடிகள் வற்புறுத்தி உரைத்தார். *"தயாமூலதன்மம்"* - என்ற அப்பரடிகளின் தொடர் *"கருணையே அடிப்படையான தர்மம்"* என்ற பொருளைத்தருவது. சமணத்தை வெறுத்துச் சைவம் புகுந்த அப்பரடிகள், சமணர்களின் உயர் கோட்பாடாகிய உயிரிரக்கத்தைப் போற்றிச் சைவத்திற்குக் கொண்டுவந்தனர் என ஆராய்ச்சியாளர்கள் பலர் சான்றுகள் காட்டி விளக்குகின்றனர். திருமழபாடித் தேவாரத்துள்,

*" தனந்திருந்தும் அவர் திறத்தை ஒழியப்பாற்றித்*
*தயாமூல தன்மவழி எனக்கு நல்கி "*

என்றும், திருநள்ளாற்றுத் தேவாரத்துள், *"சிவபெருமான் தானே கருணை நெறி நின்று ஒழுகுவான் "* என்பாராய்,

*" சலங்கெடுத்து தயாமூலதன்மம் என்னும்*
*தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்*
*நலங் கொடுக்கும் நம்பியை "*

என்றும் பதிவு செய்து காட்டுகின்றார்.

உயிர்க்கொலையும், புலைப்பொசிவும் இல்லாத உன்னத நெறியாகச் சைவம் உயர, முதல் முயற்சி மேற்கொண்ட பெருமை, அப்பரடிகளுக்கே சென்று சேர்கின்றது. தமக்குப் பல்வேறு துன்பங்களையும். துயரங்களையும் விளைக்கக் காரணர்களாக இருந்த சமணர்களுக்கு, யாதொரு துன்பத்தையும் விளைக்காத பண்பினையும், தம் தேவாரத்துள், அவர்களை இகழ்ந்துரைக்காத ஏற்றத்தையும் நோக்கும்போது *"தயாமூலதன்மம்"* என்ற கருணைப் பெருநெறியைச் சைவத்திற்கு வற்புறுத்தியதோடமையாது, தாமே அந்நெறி நின்று வாழ்ந்து காட்டிய அப்பரடிகளின் சான்றாண்மையையும், நம்மால் உணர்ந்து மகிழ முடிகின்றது.

அப்பரடிகள் திருஞானசம்பந்தரோடு இணைந்து தலயாத்திரை மேற்கொள்ளுகின்றார், திருவீழிமிழலையில் இருவரும் தங்கியிருக்கின்றனர். அக்காலை, நாட்டில் கொடிய பஞ்சம் நிலவுகின்றது. மக்கள் பட்டினியால் சாம்புகின்றனர். கோயில், வழிபாடு என்று பயணம் தொடர்ந்து, தம்மை ஏற்கும் செல்வர் இல்லங்களில் உணவு

கொண்டு, அப்பரடிகள் சென்றிருந்தால், உலகம் அவரைக் குறை கூறப்போவதில்லை. பஞ்சகாலத்தில், வறுமை நீக்கிப் பசித்தோருக்கு உணவிட வேண்டிய கடமை, அரசுக்கு உரியதே அன்றி, ஆன்மீ வாதிகளுக்கு உரியது அன்று என அவர் கூறியிருக்கலாம். ஆனால் பல நூறு பேர்கள் பசித்திருக்கத் தாம் மட்டும் உண்ணும் கீழ்மையை, ஒருகாலும் நினையாத சமயத் தலைவர்கள் இறைவன் திருவருளை வேண்டிப் பணிந்தனர். *"மனமிருந்தால் மார்க்கமுண்டு"* என்பர் முன்னோர். சிவபரம் பொருளே அப்பரடிகளின் உள்ளக் கிடக்கையை அறிந்து.

*" கால நிலைமையால் உங்கள் கருத்தில் வாட்டமுறீர் எனினும்*
*ஏல உம்மை வழிபடுவார்க்கு அளிக்க அளிக்கின்றோம் "*

என்று குற்றமற்ற படிக்காசினை அப்பரடிகளுக்கு அளித்தருள்கின்றார். அதிலும், கைத்தொண்டு புரிந்த காரணத்திற்காக, வாசி இல்லாக் காசு அவருக்குப் வழங்கப் பெற்றதாகச் சேக்கிழார் குறிக்கின்றார். இக்காசு கொண்டு, சோறு நாளும் தொண்டர் மகிழ்ந்துண்ண, அப்பரடிகள், பஞ்ச காலத்தில், மக்கள் பசிபோக்கும் அரிய செயலைச் செய்து உயர்கின்றார்.

மக்கள் நிலிவுற்றகாலை, அவர் துயர்துடைக்க வாராத எந்தச் சமயமும், வாழ்வு பெற்றதாக வரலாறே இல்லை. சமயவாதியாகிய அப்பரடிகள் *"உண்ணும்போது ஒருகைப்பிடி"* - என்ற சமயக் கோட்பாட்டுக்கு உயிர் தந்து, சமூகவாதியாக உயரும் சிறப்பினைத் திருவீழிமிழலை நிகழ்ச்சிகள் நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

மனிதப் பண்பாடு என்பது, சைவத்தின் உயிர்நாடிக் கொள்கைகளின் தலையாய ஒன்று. வாழ்வையே சத்திய சோதனையாக ஆக்கிக் கொண்ட அப்பரடிகள், சமயம் சார்ந்த சமூகப் பண்பாட்டில் மலை விளக்காகச் சுடர் விடுகின்றார். நல்லமனம், நற்சொல், இனிய செயல் என்பன பண்பாட்டின் அடித்தளங்கள்.

அப்பூதி அடிகள் இல்லத்தில், அவரைச் சந்தித்த அப்பரடிகள் *"நீர் வைத்த தண்ணீர்ப் பந்தலில் நும் பெயர் எழுதாது வேறு ஒருவர் பெயர் எழுதியது ஏன்? "*. என வினவுகின்றார். வந்திருப்பவர், தம் இதய தெய்வம் நாவரசர்தாம் என்பதை அறியாத அப்பூதியடிகள், அன்பு மிகுதியால் சினந்து *"எங்குறைவீர்?நீர்தாம் யார்?"* என வினாக்களை அடுக்குகின்றார். நாவுக்கரசருக்கு அப்பூதி அடிகளின் சினத்திற்குப் பின் பலமான, அன்பு தெரிகிறது.

*"பிற துறையில் நின்றேற*
*அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த*
*தெருளும் உணர்வில்லாத சிறுமையேன் யான்"*



எனப் பண்பாடு கலந்த மென்மொழிகள் அப்பரடிகள் திருவாயிலிருந்து வெளிப்படுகின்றன.

அப்பரடிகளின் பண்பாடு நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது.

இதேபோல், திருப்பூந்துருத்தியில் வாழ்ந்திருந்த அப்பரடிகளைக் காணவந்த திருஞானசம்பந்தர், ஊர் எல்லையில் *"எங்குற்றார் அப்பர்"* என வினவுகின்றார். தம்மை நாடிவந்த ஞானசம்பந்தர் பல்லக்கை, அவர் அறியாமல், தோளிலே தாங்கிவரும் அப்பரடிகள் கீழிருந்து,

*" உம் அடியேன் உம் அடிகள் தாங்கிவரும்*
*பெருவாழ்வு வந்தெய்தப்பெற்று இங்குற்றேன் "*

என மென்மொழி புகழ்கின்றார். தாழ்வும். பணிவும், இன்சொல்லும் பண்பாட்டுக்கு அழகூட்டும் உயர்பண்புகள் என்பதை இந்நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன.

தம் வாழ்வால், அஞ்சாமை, உயிரிரக்கம், மனித நேயம், பண்பாடு என்ற நால்நெறிகளை வகுத்தளித்த அப்பரடிகள், தம் வாக்கால் வழங்கியருளிய ஆன்மீகச் செல்வங்கள். அடுத்து நம் நெஞ்சில் நிழலாடுகின்றன.

நாவரசர் வருகை, உன்னதமான ஒரு பெருநோக்குடையது என்பதை, முதன் முதலில் இனங்கண்டு காட்டியவர், தெய்வச் சேக்கிழார்.

*" திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ*
*வருஞானத் தவமுனிவர் வாகீசர் "*

எனத் திருத்தொண்டின் நெறி வாழவந்தவர் அப்பரடிகள் என்பதனைப் புராணத்தின் முதற்பாடலிலேயே பதிவு செய்து உணர்த்துகின்றார். கற்களையும், புற்களையும் அகற்றும், உழவாரம் என்ற உன்னதக் கருவியினைக் கையிலேந்தி, உயர் தொண்டு புரிந்தவர் அப்பரடிகள். திருவையாற்றுத் தேவாரப்பனுவல் ஒன்றுள், " தொண்டலால் துணையுமில்லை" - என்று தொண்டே தம் வாழ்க்கைத்துணை என இனம் காட்டுகின்றார்.

தொண்டு என்பது, இங்கே, இறைவனுக்குச் செய்யும் தொண்டைத்தான் குறிக்கின்றது. ஆனால், இறைவன் பெயரால் செய்யப்படும் தொண்டின் பயன், மக்களையே சென்று அடைகின்றது. யார் ஒருவர், எந்த ஒரு தொண்டை, எதன் பொருட்டுச் செய்தாலும் அதன் பயன் கடைசியாகச் சமுதாயத்தையே சென்றடையும் என்ற நியதி அறிந்த அப்பரடிகள், மக்கள் தொண்டாக இயற்றி மகிழ்ந்தார், கோயிலில் தொடங்கிய தொண்டு, விரிவடைந்து சமூகத்தில் நிறைந்த திறத்தைச் சேக்கிழார் பல இடங்களில் பதிவு செய்து காட்டுகின்றார்.

தொண்டு செய்தலையே வாழ்வாகக்கொண்ட அப்பரடிகள். தொண்டராகிய தமக்கும், தலைவனாகிய இறைவனுக்கும் இடையே நிலவவேண்டிய உறவை, வெளிப்படுத்துமிடம் உன்னதமானது. கடம்பூர்த் தேவாரப் பதிகத்தில் *"நங்கடம்பனை"* எனத் தொடங்கும் பாடல் ஒன்றில்.

*"தன்கடன் அடியேனையும் தாங்குதல்*
*என்கடன் பணிசெய்து கிடப்பதே"*

என்று உரிமை முழக்கமிடுகின்றார். கடமை செய்தார், உரிமை பெறுவதற்கு உரியார் என்ற உயர்ந்த தத்துவத்தினை அப்பரடிகள் அழகுறப் பதிவு செய்கின்றார். *"என் கடன் பணிசெய்தல்"* - என்னாது *"என்கடன் பணி செய்து கிடப்பதே"* - என்று முடித்த நயம் எண்ணத்தக்கது, கிடத்தல் - என்றசொல் "செயலற்றிருத்தல்" - என்ற பொருளில் வருவது. ஒவ்வொரு மனிதனுக்கும் சிலகடமைகள் உண்டு. அவற்றை, அவன் இயற்ற வேண்டுவது, சமூக ஒழுங்கிற்கு இன்றியமையாத ஒன்று. அதனைத் திறமறிந்து இயற்றுவான் ஒருவன், *"நான் இயற்றினேன்"*, *"என்னால்தான் நடந்தது"*, *"நான் இல்லாவிட்டால் சிறிதும் நடந்திராது"* என்ற எண்ணம் சிறிதுமின்றி, மனத்தால் அடங்கியிருக்கும் பண்பாட்டுத் திறத்தையே *"கிடத்தல்"* என்ற சொல்லால் அப்பரடிகள் பதிவு செய்கின்றார். *"பணிசெய்தோம்"* என்ற இறுமாப்புச் சிறிதும் இலராய்ப் பணி செய்தாரைக் காக்க வேண்டிய கடமை, இறைவனுக்கு உரியது என்பதையும், அவன் காவல், முன்னதாக உறுதி செய்யப்பட்டாலல்லாது, கடமை சிறவாது என்பதையும் *"தன்கடன் அடியேனையும் தாங்குதல்"* என்ற தொடரால் சுட்டும் திறம் எண்ணி எண்ணி மகிழத்தக்கது.

சமூக வாழ்விற்கும் இவ் அரியதொடர் பொருந்தி வருவது, அப்பரடிகளின் உலகியல் அனுபவத்தைப் பறை சாற்றுகின்றது.

*"என்கடன் பணிசெய்து கிடப்பதே"* என்ற உணர்வோடு பணிதொடங்கி நடத்தும்போது, இடையூறு நேரிட்டால் என்ன செய்வது? என்ற வினா பிறக்கிறது. இடையூற்றிற்குத் தலைசாய்த்து ஒதுங்கி விடுவதா? இடையூற்றினை எதிர்த்துப் போரிடுவதானால் சமயம் சார்ந்ததொண்டர் ஒருவர் எவ்வாறு போரிடுவது? வன்முறைப் போராட்டமா? இல்லை வேறு சாத்துவிக நெறிப் போராட்டமுண்டா? என்ற வினாக்கள் அடுக்கு அடுக்காக நம்முன் எழுகின்றன. அப்பரடிகள், அதற்கும்விடை தருகின்றார். எவ்வுயிர்க்கும் தீங்குநேராது, அகிம்சை என்ற நெறி நின்று, தன்னைத்தானே வருத்திக்கொள்ளும் "சத்தியாக்கிரகம்" என்ற பெருநெறி, அப்பரடிகளால் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் முதன் முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது. 20 ஆம் நூற்றாண்டில் காந்தியடிகள் மேற்கொண்ட, அகிம்சைநெறியிலான, சாத்துவிகப் போராட்டம் என்று வருணிக்கப்பட்ட சத்தியாக்கிரகம், 1300 ஆண்டுகளுக்கு முன்னதாகவே, தமிழ் நாட்டில், ஒரு சமயச் சான்றோரால் அறிமுகப் படுத்தப்பட்டவொன்று என்பது, நமக்குப் பெருமை தருகின்றது.



அப்பரடிகள் குடந்தையை அடுத்த பழையாறை சென்று வழிபாடு நிகழ்த்த எண்ணுகின்றார். அங்கே சென்றபோது வடதளி என்ற பெயர் கொண்ட சிவாலயம் மறைக்கப்பெற்று, சமணர்களின் விமானமாகக் காட்சி தரக் காணுகின்றார். உறுதி மிக்க அப்பரடிகள், அடியார்கள் புடைசூழ வடதளி வாயிலில, "வண்ணம் கண்டு நானும்மை வணங்கியன்றிப் போகேன்" என்று உறுதியோடு உண்ணாவிரதம் மேற்கொண்டு அமருகின்றார். இறைவன் அருள், அசரீரி வாயிலாக மன்னனிடம் வெளிப்படுகிறது. மன்னன் விரைந்து போந்து சமண்பள்ளியை அகற்றி, உள்ளே மறைந்து கிடந்த வடதளிச் சிவாலயத்தை வழிபாட்டுக்கு உரியதாக்குகின்றான். மகிழ்ந்த அப்பரடிகள், மன்னனைப் போற்றி, வடதளிப் பெருமானை,

*" தலையெலாம் பறிக்குஞ் சமண்கையருள்*
*நிலையினான் மறைத்தான் மறைக்கொண்ணுமோ*
*அலையினார் பொழில் ஆறை வடதளி*
*நிலையினானடியே நினைந்துய்ம்மினே "*

என்று தொடங்கும் பதிகம் பாடி வணங்கிச் செல்கின்றார். நியாயம் கிடைக்கத் தன்னைத் தானே வருத்திக் கொண்டு போராடும், சத்தியாக்கிரகப் பெருநெறி, அளவற்ற மனத்திண்மை உடையரால் மட்டுமே மேற்கொள்ளவல்லது. உரிமைகளைப் பெற இரத்தம் சிந்தும் போராட்டங்களை நிகழ்த்துவதைவிட, மக்களை, உரிய பிரச்சனைகளில் ஈர்க்கவும், ஒருமுகப்படுத்தவும், சத்தியாக்கிரகமே சரியான வழி என்று கண்டு காட்டிய, அப்பரடிகளின் மன உறுதி நம்மை இறும்பூது எய்திட வைக்கின்றது.

சங்க இலக்கியங்கள், தொழில் வழிப்பட்ட சமூகப் பிரிவுகளையே சித்திரிக்கின்றன. பிற்காலத்தே தொழில் வழி உருவான சாதிய நெறிகளையும், அவற்றிடையே உருவான ஏற்றத் தாழ்வுகளையும், அங்கே காண இயலவில்லை. வருணம், குலம், கோத்திரம், சாதி பற்றிய சாத்திரக் கூறுகள் எல்லாம் வளர்ந்து தலைவிரித்தாடிய காலம் கி.பி 7ஆம் நூற்றாண்டு என்பதை அப்பரடிகளின் பனுவல்கள் நமக்குத் தெள்ளத் தெளிய எடுத்துரைக்கின்றன.

சமயம் என்பது, பல்வேறு காரணங்களால் பிரிந்து கிடக்கும் ஒரு சமூக மக்களை, ஒன்றுபடுத்தும் ஒரு பெரிய சக்தியாக கருதத்தக்கது. உறவு, சாதி, இனம், மொழி என்பனவற்றையெல்லாம் விட, மக்களை ஒன்று படுத்தும் பெரிய சாதனமாகச் சமயம் விளங்க வல்லது.

சிவனடியார் என்றபெரு நிலையில், பிறவகைப் பேதங்களை மறந்து, ஒன்றுபடவேண்டிய மக்கள், சமய வாழ்வை ஏற்றுக் கொண்ட பிறகும், தம்முள் சாதி, குலம், எனப் பேதப்பட்டு நிற்றலைக் கண்டு, அப்பரடிகளின் திருவுள்ளம் விம்முகின்றது. கடும் சொற்களைக் கையாளாத அப்பரடிகள், சாதி பேதங்களைச் சாடும் போது

சற்றே கடுமையான சொற்களைக் கையாளுகின்றார். அவரது உள்ளத்திலிருந்து சினம், சொற்கள் வாயிலாக வெளிப்படுகின்றது.

> " *சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்*
> *கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்* "

என்ற வெளிப்பாட்டில், *"கோத்திரமும் குலமும் கொண்டு"* என்று சாத்திரத்தைச் சான்று காட்டுவாரை எள்ளி நகையாடுகின்றார். அன்னோரைச் *"சழக்கர்கள்"* என்ற கடுஞ்சொல்லாற் குறிக்கின்றார்.

சிவன் இறைவன்: அவன் அருள்பெரிது: அவனை வணங்கினால் ஒரு நொடியில் எல்லாம் கைகூடும் என்று அவன் சந்நிதியில் ஒன்றுபடும் குணமிலராய், சாதி பேதங்களால், சமூகத்தைப் பேதப்படுத்திப் பிரிக்க நினைப்பாரைச் சாடும் அப்பரடிகள், சமய வழியில், சமூக ஒருமைப்பாட்டுக்கு வித்திடும் திறம் புலனாகின்றது, நோயால் நொந்து கிடப்பாராயினும், அவர்களையெல்லாம் ஒன்றாகக் கருதி ஈடேற்ற, சமயம் என்ற பெருநெறி ஒன்றைத் தவிர, வேறு மார்க்கம் இல்லை என்று தெளிந்த அப்பரடிகள், மேலும் ஒருபடி கடந்து,

> " *அங்கமெலாம் குறைந்து அழுகுதொழு நோயராய்*
> *ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்*
> *கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்ப ராகில்*
> *அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே* "

என்று அருளிச் செய்கின்றார்.

மனித குலம், பேதங்களை விடுத்து, ஏதேனும் ஒரு பொது அடிப்படையில் ஒன்றுபடுமானால், சமூகவளர்ச்சி என்பது எவ்வளவு உன்னதமாக அமையும் என்று எண்ணும் அப்பரடிகளின் பெரிய நெஞ்சம் இங்கே புலப்பட்டுத் தோன்றுகின்றது. பேதங்களை விட்டு, ஒருமைகாண விழைவாரைக் கடவுளராக் கருதித் தாம் வணங்க இயலும் என்ற உயர்வான நெஞ்சம், அப்பரடிகள் வழங்கும் ஆன்மீகப் பெருநெறியாக விரிகின்றது. எல்லாப் பொருள்களிலும், எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்றான் என்ற உணர்விலராய்ச் சடங்குகளையே சமயம் என்று கருதிக் கங்கையிலும், காவிரியிலும் மூழ்கிக் கிடப்பாரை,

> " *கங்கையாடில்என், காவிரி ஆடில்என்*
> *கொங்குதண் குமரித்துறை ஆடில்என்*
> *ஓங்கு மாகடல் ஓதநீராடிலென்*
> *எங்கு மீசன் எனாதவர்க் கில்லையே* "

என எள்ளி நகையாடுகின்றார்.



புற அழுக்குகளை நீக்க நதிகளை நாடிச் செல்லும் மக்கள், சாதிபேதங்களிலும், ஏற்றத் தாழ்வுகளிலும் அழுந்திக் கிடக்கும் மன அழுக்குகளை நீக்கிக் கொள்ள முயலாது, அவமே காலங் கழிப்பதைக் கண்டு சகிக்காத அப்பரடிகளின் நெஞ்சம் நன்கு புலனாகின்றது.

சமயத்துறையில், இறைவன் திருவருளைப் பெறுவதற்குரிய வாயில் எது என்ற வினாவிற்கு, அப்பரடிகள் தரும் விளக்கம் நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. சிவலிங்க வழிபாட்டை எப்படி எங்கே எவ்வாறு நிகழ்த்துவது என்பதற்கு, அப்பரடிகள், சிவாலயத்தையும், சிவலிங்கத்தையும், அபிடேக ஆராதனைகளையும் வற்புறுத்துகின்றார், ஆனால், நாம் நினைப்பது போலல்லாமல், வேறு வகையாக அவர் விளக்கம் அமைகின்றது. ஈசனார்க்குப் பூசனை புரிய வேண்டுமா? கற்கோயில் நாடி அலையாதீர்கள்! உங்கள் உடம்பையே ஆலயமாக்கிக் கொள்ளுங்கள். வழிபாடு நடத்தும் பக்தன், உங்கள் மனம்தான். நீராட வேண்டுமா? நதிகளை நோக்கி ஓடாதீர்கள்: வாய்மை என்ற நீரிலே மூழ்கி எழுங்கள். உங்கள் அகமனத்துள்ளுறையும் ஆன்மாவைச் சிவலிங்கத் திருமேனியாகக் கொள்ளுங்கள். அபிடேக ஆராதனைகளுக்கு வெளியில் வேறு எதனையும் தேடி ஓடாதீர் நேயம் எனப்படும் அன்பினையே நெய்யாகவும், பாலாகவும், தூய நீராகவும் கொண்டு, பொருந்த அபிடேகம் செய்யுங்கள். இந்த அகப் பூசனைக்கு ஈடான பூசனை உலகில் வேறு இல்லை என்கிறார் அப்பரடிகள்.

> " *காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக*
> *வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக*
> *நேயமே நெய்ம்பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்*
> *பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே* "

சமயத் துறையில், புறப்பூசைகளெல்லாம் உன்னையே நீ கோயிலாக்கிக் கொள்வதற்கான எண்ணத்தை உருவாக்கவே. மனிதர்கள், நடமாடும் கோயில் நம்பர்கள் ஆதல் வேண்டும். வாய்மையும், அன்பும் வளர்ந்து ஓங்கும் போது, இறைவன் உன் உள்ளத்திலிருந்தே வெளிப்படுவான் என்பன சமயத்துறையில் அப்பரடிகள் காட்டும் புரட்சிகரமான வழிமுறைகளாக அமைகின்றன. மனிதனின் உயர்குண வளர்ச்சியே உன்னதமான சமயம், என்ற மதிப்பீடு ஆன்மீகத் துறையில் ஒரு புதிய தடமாக அமைகிறது.

வழிபாடு நிறைவுற்றாயிற்று, சிவகதி என்ற பெறும் பேறு எப்போது வாய்க்கும், என்று வினவுவார்க்கு, அப்பரடிகள் விடை சொல்கின்றார். ஓர் உயரிய விளைவைப் பெற, ஓர் உழவன் மேற்கொள்ள வேண்டிய உன்னதமான முயற்சிக் கூறுகளையெல்லாம், உருவமாக்கிச் சமயத்துறையில் ஒரு புதிய தடம் காட்டுகின்றார்.

உழுதல், விதைக்கல், களைநீக்குதல், நீர்ப்பாய்ச்சுதல், வேலியமைத்தல் என்பன முறையாக அமைந்தால் விளைவு நிச்சயமாகும். இங்கே சிவனருள் என்ற விளைவைப் பெற எவ்வெவ்வாறு முயல வேண்டும் என்கிறது ஓர் அழகிய தேவாரத் திருப்பாட்டு.

*" மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தை வித்திப்*
*பொய்ம்மையாம் களையைவாங்கிப் பொறையெனும் நீரைப்பாய்ச்சித்*
*தம்மையும் நோக்கிக் கண்டுதகவெனும் வேலிஇட்டுச்*
*செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையுமன்றே "*

நெஞ்சத்தை மெய்ம்மையால் உழவேண்டும். திருவருளை அடைந்தே தீருதல் வேண்டும் என்ற பக்தி வைராக்கியத்தை விதையாகப் பாவவேண்டும். மெய்ம்மை உழவு செய்யும் போதே வேரற்றுவிடும் பொய்ம்மைக்களைகளை முற்றாக நீக்கவேண்டும். எதனையும் தாங்கி நிற்கும் பொறுமை என்னும் நீரை நாள்தோறும் பாய்ச்சவேண்டும். தகுதிப்பாடு எனப்படும் நல்லொழுக்கங்களால் வேலி அமைத்தல் வேண்டும். அத்தனையும் செய்து செம்மை எனப்படும் உயர் பண்பில் தலை நிற்பாரானால் சிவகதி என்னும் பயிர் தாமே விளையும்.

மனித மனவளர்ச்சியிலும், மனிதப் பண்புகளின் வளர்ச்சியிலும் அப்பரடிகளுக்குத்தான் எவ்வளவு பெரிய நாட்டம்!

செய்வன செய்து, தவிர்வன தவிர்த்து வாழும் நெறியான வாழ்வை, இம்மையில் மேற்கொள்ளுதலே போதுமானது. இறையருள் என்பது எங்கிருந்தோ வருவது அன்று. அது உன்னுள் தோன்றி உருப்பெற்று மலர்வது என்ற அப்பரடிகளின் கூற்று, சமயத்துறையில் முற்றும் புதிய சிந்தனையாக அமைகின்றது.

அப்பரடிகள் காட்டிய மனித மன வளர்ச்சி நெறியை விட்டு, அறிவே துணையாக ஆண்டவனை அடைந்துவிட முயல்வார்க்கு, அது இயலாது என்று அவர் எச்சரிக்கையும் செய்கிறார். சிலர், மனமே துணையாக, அறிவினைப் பெரிதென்றெண்ணி, வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கியும் விடுகின்றனர். கடும் சினம் நிறைந்த பாரம் ஏற்றிய படகு, ஐம்புல ஆசை என்ற பாறைமேல் மோதும்போது எல்லாமே இல்லாது போய் விடுகின்றது. எவ்வளவு அழகான உருவகம்.

*" மனம் எனும்தோணிபற்றி மதியெனும் கோலைஊன்றிச்*
*சினம் எனும் சரக்கையேற்றிச் செறிகடலோடும்போது*
*மதனெனும் பாறைதாக்கி மறியும்போதறிய வொண்ணாது*
*உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடையகோவே "*



மனிதப்பண்புகள் வளர்ச்சிபெறாத போது. அறிவே துணையாகக் கொண்டு தொடங்கப்படும் வாழ்க்கைப் பயணம், இடையிலே இற்று அழிந்துவிடும் என எச்சரிக்கின்றார். இறை உணர்வு என்பது ஒரு பற்றுக்கோடு. மனிதப் பண்பின் வளர்ச்சியே வெற்றியை அடைவதற்குரிய வாயில். அறிவே எல்லாவற்றையும் சாதிக்கப்போதுமானது என்பார்க்கு, ஓர் எச்சரிக்கையாக அமைகிறது இவ் அழகிய திருப்பாட்டு

அப்பரடிகள் வழங்கிய ஆன்மீகச் செல்வம், மக்கள் இனத்தை எல்லாம் ஈடேற்றும் உன்னதமானது. அவர்தம் வாழ்வாலும் வாக்காலும் உணர்த்திய இறைமை சார்ந்த அறநெறிக் கோட்பாடுகளே இங்கே ஆன்மீகச் செல்வம் என ஆராய்ந்து காட்டப்பட்டது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில், தமிழகம் தன் பண்டைப் பெருமைகளை எல்லாம் இழந்து நின்ற நேரத்தில். விடிவெள்ளியாக அவதரித்த பேரருளாளர் அப்பரடிகள். மன்னன் தவறிழைத்த காலை, ஒரு தனிமனிதர், அரசுக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்திய தீரம், சமயம் சார்ந்த ஒருசமூகப் புரட்சியாகவே கருதப்பட்டது. சைவம் என்பது, வெறும் சடங்குச் சமயமன்று அது உன்னதமான உயர்கோட்பாடுகளைக் கொண்டது என்பதை, முதன் முதலாக எடுத்துக்காட்டிய பெருமை அப்பரடிகளுக்கே உண்டு. அப்பரடிகளின் உன்னத வாழ்வில், தொண்டு என்பதே தலையாயது. இறைவன் பெயரால், மக்களினத்திற்கச் செய்யும் உயர்பணிக்கு வித்திட்ட வரும் அவரே. பகைமேகம் சூழுங்காலை அதனை எதிர்த்துப் போராடுதல் வேண்டும். அப்போராட்டம் இரத்தம் சிந்தாமல் சாத்விகப் போராட்டமாதல் வேண்டும் என்று வற்புறுத்தித் தனிமனிதர் சத்தியாக்கிரகத்தை, உண்ணா நோன்பால் சாதித்துக் காட்டிய முதல்வரும் அவரே. சாதி குலம் எனத் சாத்திரம் பேசி, மக்களை வேறுபடுத்த முனைந்தாரைச் சாடி, ஓர் இறைவன் பெயரால் மக்களினம் ஒன்றுபடல் வேண்டுமென முதல் முழக்கமிட்ட பெருமையும் அப்பரடிகளுக்கே உரியது.

இறைவனை நாடிக் கொயிலுக்குப் போவதை விடுத்து. உன்னையே ஒரு நடமாடும் கோயிலாக்கிக் கொள் என்று வற்புறுத்தியவரும் அவரே. சிவகதியாகிய விளைவைப் பெற மெய்ம்மை உழவு முதலாயவற்றை மேற்கொள்ள வேண்டுமெனத் தனிமனித உள்ள வளர்ச்சியை, உருவகத்தால் சுட்டிக் காட்டிய சிறப்பும் அப்பரடிகளுக்கே உரியது.

இந்தியத் தத்துவச் சிந்தனைகளுள் காலத்தால் மூத்த சிந்தனை, அப்பரடிகள் வழங்கிப்போந்தது. இறைவன் பெயரால், உலகத்தவர்களை யெல்லாம் ஒன்றுபடுத்தும் பேதமற்ற பெருநெறி, அப்பரடிகளின் தனிநெறி! அங்கே சாதி குலம் இல்லை, ஏற்றத்தாழ்வுகளில்லை. அன்பும், மனிதநேயமுமே கடவுள், மனித மனவளர்ச்சியும், பண்பாட்டின் முதிர்ச்சியுமே உன்னதமான சமயத்தின் பெருநெறிகள், தான் கண்ட பெருநெறித் தலைவனுக்கு அவர் சிவம் எனப் பெயரிட்டார். வேறுபடப் பிறர் கூறினும், தமக்கு அதுவும் உடன்பாடே என நேசக்கரம் நீட்டினார்.

இந்த உன்னத ஆன்மீகப் பெருநெறியை, விலைமதிப்பற்ற செல்வங்களாக நமக்கு வழங்கியவர் அவர். இத்தகு உன்னதச் செல்வத்தைப் போற்றிப் பாதுகாப்பதும், உலகவர்களுக்கெல்லாம் வழங்குவதும் தமிழரின் தலையாய கடமையாகிறது.

உ

யாழ் காரைநகர் மணற்புரம்

# ஸ்ரீ முத்துமாரியம்மை தேவஸ்தானம்

ஆலயத்திற்குச் சிறந்த பணியாளனாகவும் சமய சமூக சேவையாளனாகவும் விளங்கும் ஸ்ரீ K. K. சுப்பிரமணியம் அவர்களுக்கு 19.03.2003ல் **சிவநேசச் செல்வர்** என்ற பட்டமளித்து கௌரவித்த போது வழங்கிய வாழ்த்துப்பாமாலை.

**விருத்தங்கள்**

அரசநற் பணிகள் தாங்கி
ஆன்மீகப் பயனை வேண்டி
அருணெறிப் பணிகள் செய்யும்
அன்பனே சுப்பி ரமண்யக்
கருணைநெஞ் சுடைய செல்வா,
காரையூர் மணற் புரத்துக்
கரகத்தாய் முத்து மாரி
கண்ணருள் செழித்து வாழி

எங்கெங்கே சமய தேவை
எங்கெங்கே சமூக தேவை
அங்கங்கே பணிகள் ஆற்றி
அகங்குளிர் கொடைகள் நல்கும்
செங்கரச் செல்வா நின்னை
சிவநேசச் செல்வர் என்னும்
மங்கள விருது நல்கி
வாழ்த்தினோம் தமிழ்போல் வாழி

ஒப்புயர் மணற்பு ரத்தாள்
ஒளிர் முத்து மாரித்தாயின்
செப்புசீர்த் தொண்ட னேநீ
திகழ் "**சிவ நேசச் செல்வர்
சுப்பிர மணியம்**" என்று
சூரியன் காலம் வாழி
முப்பொருள் தெளிந்த ஞான
முத்தென வாழி வாழி

அருட்கவி சி. விநாசித்தம்பி



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்


# மறைந்த திருப்பணிச் செல்வர்
# அமரர் சு. முருகேசு - காரைநகர்

**பழம்பெரும் பிரமாண்டமான காரைநகர் திண்ணைபுரம் ஈழத்துச்சிதம்பரத்தின் திருப்பணிச்சபைத் தலைவர் திரு. சு. முருகேசு சென்றமாதம் வவுனியாவில் காலமானார். இவர் திருப்பணிச்சபை தலைவராகப் பல்லாண்டுகள் இருந்த செய்த தொண்டுகள் பல. இவரை சைவ மக்கள் ஒருபொழுதும் மறக்க முடியாது. அப்படி வரலாறு படைத்த பெருமாகான் திரு. சு. முருகேசு இரவு பகலாக இச்சிறப்புமிக்க சிவாலயத்திற்கு இரு கம்பீரமான இராஜகோபுரங்களை ஆலய நுழைவாசலில் பலலட்சம் ரூபா செலவில் மேற்பார்வைபார்த்து வியர்வை சிந்தி இலட்சக்கணக்கான பணம் சேர்த்து ஆலயம் புதுப்பொலிவுடன் விளங்க திருப்பணிகள் செய்தவர்.**

**அரசாங்கசேவையில் இருந்து இளைப்பாறிய பின் சிவத்தொண்டில் ஈடுபட்டார். பெரும் எழுத்தாளரான இவர் ஈழத்துச்சிதம்பரம் என்ற நூலும் எழுதி வெளியிட்டார். சிவசிந்தனையுடன் ஆலய வளர்ச்சியிலும் திருப்பணியிலும் அரும்பெரும் தொண்டுபுரிந்த திருப்பணிச்சபைத்தலைவர் அமரர் சு. முருகேசு இன்று எம்மத்தியில் இல்லை என்பது பெரும் கவலை. சேர். கந்தையா வைத்தியாநாதன் எப்படி திருக்கேசுவரர் திருப்பணிகளை செவ்வன நடத்தி அங்கு குடிகொண்டிருந்தாரோ அப்படி மறைந்த மாமேதை அமரர் சு. முருகேசு இச்சிவாலயத்தில் இருந்து திருப்பணிகளை மேற்பார்வை செய்தார். ஆலய திருக்குளத்தை மிகச்சிறப்பாக புதுப்பித்து அமைத்தவர்.**

**பலத்திருப்பணிகளை செய்த அமரர் 07.06.1998 மகா கும்பாபிஷேகம் பார்க்க மிகவும் ஆர்வமாக இருந்தவரை விசேட விமானம் மூலம் கே.கே. சுப்பிரமணியம் அவர்கள் அழைத்துச்செல்வதை அவர் உயிர்பிரியும் வரை மகாகும்பாபிஷேகத்தை கே. கே. சுப்பிரமணியம் புண்ணியத்தால் தான் கடைசி நேரம் கும்பாபிஷேகம் பார்க்கக் கிடைத்த பாக்கியம் உங்களைச் சாரும் என்று நித்தம் கூறுவார்.**

*அ. தவராசன்*
*கூமாங்குளம்*
*வவுனியா*
*24.02.2002*



காரைநகர் திண்ணபுரம் சிவன்கோவில் ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் மணிவாசகர் சபையின் 48வது ஆண்டு விழா 19.12.2002 மாலை ஆலய வசந்த மண்டபத்தில் நடைபெற்றபோது பரோபகாரமணி கே. கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. அவர் 48வது தலைமை உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

அம்பிகை துணை



காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவில் ஈழத்துச் சிதம்பரம் மார்கழித் திருவாதிரை உற்சவத்தின் போது (20.12.2002) செவ்வந்தி மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு சிவகாம சுந்தரி சமேத ஆனந்த நடேச பெருமானின் பஞ்சரத பவனியின் பின் வசந்த மண்டபத்தில் திரு. கே. கே சுப்பிரமணியம் அவர்கட்கு காளாஞ்சி கொடுத்து கௌரவிக்கப்பட்டார்கள்.

காரைநகர் திருமணற்காடு அருள்மிகு கும்பநாயகி முத்துமாரியம்மன் தேவஸ்தானம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு சுங்க இலாகாவில் பணிபுரிந்து பிரபலமாகிய சைவ சமய அபிமானியும், சமூக சேவையாளருமாகிய திருவாளர் கே. கே. சுப்பிரமணியம் அவர்களின் முன்னோர்களால் குல தெய்வமாக பூசிக்கப்பட்டும், பரிபாலிக்கப்பட்டும் வந்துள்ளது.

இந்த அருள்மிகு முத்து மாரியம்மன் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற திருவிழாவில் இரண்டாம் நாள் மகோற்சவத்தை பெருவிழாவாக அன்னாரின் முன்னோர்களும் அவர்களின் உறவினர்களும் நடாத்தி வந்துள்ளனர்.

முன்னோர்களின் மரபைப் பின்பற்றி இந்நாட்களில் திரு. சுப்பிரமணியம் அவர்களும், அவரின் மனைவியார் திருமதி. சரஸ்வதி சுப்பிரமணியம் அவர்களும், பிள்ளைகளும், மருமக்களும், பேரப்பிள்ளைகளும் உற்சவங்களை வெகு சிறப்பாக செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபலமான சிவாச்சார்யார்களையும், சமய பெரியார்களையும், நாதஸ்வர, தவில் வித்துவான்களையும் உற்சவத்திற்கு வரவழைத்து சிறப்புச் செய்து கௌரவிக்கின்றனர். தங்கள் குலதெய்வமாகிய முத்துமாரியம்மன் தங்களதும், தங்களது உற்றார் உறவினர்களதும் முன்னேற்றத்திற்கு முத்துமாரியம்மனின் அருள் மூலகாரணம் என்று கருதி அம்பிகை மீது நன்றி உணர்வுடன் அபிமானம் கொண்டுள்ளனர்.

இவ்வாலயத்தில் சைவநெறி மரபுப்படி பேணப்படுவது கண்டு யாழ்ப்பாணத்தில் வாழும் சைவர்களும், குறிப்பாக சிவப்பிரமணர்களும் மிகமகிழ்ச்சியடைகின்றனர். இவ்வண்ணமான தொண்டுகள் நெடுங்காலமாக நிலைபெறுவதற்கும் அவர்களின் சந்தானங்கள் சீரும் சிறப்பும் பெற்று இவர்களைப் போல அம்பாளுக்கு திருப்பணி புரியும் பேறினை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பரம்பொருளை வேண்டுகின்றோம்.

அருள்மிகு அம்பிகையின் கடாட்சத்தினால் பக்தராகிய திரு. கே. கே. சுப்பிரமணியம்.J.P. அவர்கள் இரண்டாவது உலக இந்து மாநாடு மிகச்சிறப்பாக நடைபெறுவதற்கு பலவகையில் மிகுந்த அபிமானத்துடன் உதவி புரிகின்றார். அந்த மாநாட்டு நிகழ்ச்சிகள் பலவற்றுக்கு அனுசரணையாளராக வந்துள்ள பலர் அவரால் அறிமுகம் செய்யப்பட்டவர்கள்.

பேராசிரியர்
**சி. பத்மநாதன்**
வரலாற்றுத்துறை பேராசிரியர்
பேராதனைப் பல்கலைக்கழகம்